நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**உணவுப் பணவீக்கம் 10.05 சதவீதமாக உயர்வு**

First Published : 02 Sep 2011 12:05:00 AM IST

புது தில்லி, செப்.1: நாட்டின் உணவுப் பணவீக்கம் ஆகஸ்ட் 20-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 10.05 சதவீதமாக உயர்ந்தது. வெங்காயம், பழங்கள், காய்கறிகள், புரதம் சார்ந்த உணவுப் பொருள்களின் விலை அதிகரித்ததால் பணவீக்கம் இரட்டை இலக்கத்தைத் தாண்டியுள்ளது. முந்தைய வாரத்தில் ஒட்டுமொத்த விலைக் குறியீட்டெண் அடிப்படையில் உணவுப் பணவீக்கம் 9.80 சதவீதமாக இருந்தது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வெங்காயத்தின் விலை 57.01 சதவீதமும், உருளைக் கிழங்கு விலை 13.31 சதவீதமும் உயர்ந்திருந்தது. பழங்களின் விலை 21.58 சதவீதமும், காய்கறிகளின் விலை 15.78 சதவீதமும் உயர்ந்து காணப்பட்டது.

அசைவ உணவுகளில் முட்டை, மீன், இறைச்சி ஆகியவற்றின் விலை 12.62 சதவீதம் உயர்ந்திருந்தது. பால், சிறு தானியம், பருப்பு வகைகளின் விலைகள் கணிசமாக குறைந்திருத்தது. 2010-ம் ஆண்டில் பெரும்பாலான வாரங்களில் பணவீக்கம் இரட்டை இலக்கத்திலேயே இருந்தது குறிப்பிடத்தக்கது.

கவலையளிக்கும் விஷயம் - பிரணாப்: உணவுப் பணவீக்கம் இரட்டை இலக்கத்தை எட்டியுள்ளது கவலையளிப்பதாக மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறினார். பணவீக்கத்தை அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது என்று குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு இதே காலத்தில் உணவுப் பொருள்களின் விலை குறைந்திருந்தது. பின்னர் உயர்ந்துள்ளது. எனவே உணவுப் பொருள்களின் விலை சிறிதளவு உயர்வது குறித்து ஆச்சரியமளிக்கவில்லை என்று திட்டக்குழு துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா தெரிவித்தார்.

**மத்திய பட்டியலில் நீர் வளத்துறை**

First Published : 02 Sep 2011 01:09:06 AM IST

புது தில்லி, செப்.1: மத்திய பட்டியலில் நீர் வளத்துறையைச் சேர்க்க வேண்டும் என்று நாடாளுமன்ற நிலைக்குழு பரிந்துரை செய்துள்ளது. தேசிய அளவில் ஒருமித்த கருத்து

எட்டப்பட்டு நீர்வளத்துறையை மத்திய பட்டியலில் சேர்க்க வேண்டும். அல்லது பொதுப் பட்டியலிலாவது சேர்க்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இவ்விதம் சேர்க்கும்போதுதான் ஒருங்கிணைந்த திட்டம் வகுக்கப்பட்டு நீர்வளம் குறைந்து போவதைத் தடுக்க முடியும் என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

நிலத்தடி நீர்வளம் குறைந்து வருவது குறித்து கவலை தெரிவித்துள்ள இக்குழு, பல்வேறு பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

அந்த பரிந்துரையில் மத்திய பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும் அல்லது பொதுப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நீர்வளத்துறை மாநில அரசுகளின் பட்டியலில் அட்டவணை 7, பிரிவு 17-ல் உள்ளது. மாநிலங்களிடையே நீர் வளம் குறித்து மாறுபட்ட கருத்துகள் உள்ளதாகவும் நிலைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. ஏற்கெனவே உள்ள விதிமுறைகளின் அடிப்படையில்தான் மத்திய நீர்வள அமைச்சகம், சர்ச்சைகளை தீர்த்து வருகிறது. இருப்பினும் பெருமளவில் சர்ச்சைகள் தீர்க்கப்படாமல் உள்ளன.

நீர் வளத்துறையை மத்திய பட்டியலில் சேர்ப்பதற்கு ஒருமித்த கருத்து எட்டப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக வரைவு மசோதா ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று நீர்வள அமைச்சகத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

குடிநீர் விநியோகம், பாசனம், கால்வாய், நீர் தேக்கம் ஆகியன மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. மாநிலங்களிடையிலான ஆறுகளை மேம்படுத்துவது மத்திய பட்டியலில் உள்ளது.

**கோவை, குமரியில் மழை**

First Published : 01 Sep 2011 02:07:09 AM IST

சென்னை, ஆக. 31: தமிழகத்தில் கோவை, கிருஷ்ணகிரி, தருமபுரி, கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய ஊர்களில் புதன்கிழமையன்று மழை பெய்தது.

தமிழகம், புதுவையில் வியாழக்கிழமை (செப். 1) மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு பருவமழையின் காரணமாக தமிழகம், புதுவையில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக, தென்பகுதிகளான கன்னியாகுமரி மற்றும் அதையொட்டியுள்ள மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. சென்னையில் இரவில் லேசான மழை பெய்து வருகிறது. இந்நிலையில், வெப்பச்சலனத்தின் காரணமாக தமிழகம், புதுவையில் பரவலாக வியாழக்கிழமை மழை பெய்யக் கூடும்.

அடுத்த 24 மணிநேரத்தில், சென்னையில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**'இயற்கை விவசாயமே எதிர்காலத்தை தீர்மானிக்கும்'**

First Published : 01 Sep 2011 01:12:32 PM IST

ஆலங்குடி, ஆக. 31: எதிர்காலத்தை இயற்கை விவசாயமே தீர்மானிக்கும் என்றார் கோவை பொதுப் பணித் துறைச் செயற்பொறியாளர் ஆர். இளங்கோவன்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியை அடுத்துள்ள குளமங்கலம் தெற்கு கிராமத்தில் நீர்வள நிலவளத் திட்டத்தின் சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சுற்றுச்சூழல் சமூகப் பாதுகாப்பு, நீடித்த நிலைத்த வேளாண்மை பயிலரங்கில் அவர் பேசியது:

சுற்றுச்சூழலில் சென்னை, மதுரை, கோவை ஆகிய மூன்று கோட்டங்களாக தமிழகம் பிரிக்கப்பட்டு, மக்களுக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

சுற்றுச்சூழல் பாதிப்பால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. இதற்குத் தீர்வு காணும் வகையில் கொண்டு வரப்பட்ட நவீன தொழில்நுட்பங்களாலும் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன.

அதிக விலை கொடுத்து வாங்கும் விதைநெல் முளைப்பதில்லை. விளைந்தாலும் விளைச்சல் குறைவாகவே இருக்கிறது. இயற்கை மாற்றத்தால் ஏற்படும் பூச்சிகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அதிகளவு பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் உணவுப் பொருள்கள் நஞ்சாகின்றன. மறுபுறம், உற்பத்தித் தொழில்சாலைகள் மூலமாகவும் இயற்கை நஞ்சாகிறது.

இதற்கு, பின்விளைவற்ற இயற்கை முறையில் பின்பற்றப்படும் நீடித்த நிலைத்த வேளாண்மைமே நிரந்தரத் தீர்வாகும். இயற்கை முறையில் விவசாயம் செய்பவர்கள்தான் முதலாளிகளாகும் நிலை விரைவில் வரும். எனவே, இருக்கும் விவசாய நிலங்களைப் பாதுகாத்து, அதில் இயற்கை முறையில் விவசாயம் மேற்கொள்ள வேண்டும்.

நம் நாட்டின் வளத்தை வெளி நாட்டினர் அறிந்த அளவுக்கு நாம் அறியாததாலேயே நாளுக்கு நாள் வேளாண் புரட்சியில் சரிவு ஏற்பட்டுள்ளது என்றார் அவர்.

பட்டுக்கோட்டை பாசன உபகோட்ட உதவிச் செயற்பொறியாளர் எம். கேசவன், தமிழ்நாடு இயற்கை விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த அரச்சலூர் ஆர். செல்வம், கருணை இயற்கை விவசாயப் பண்ணை சி. அப்பாவு பாலாண்டார், ஆரண்யா கூட்டுப் பண்ணை செயல் இயக்குநர் தட்சிணாமூர்த்தி, குடுமியான்மலை மண் பரிசோதனை நிலைய தலைமை வேளாண் அலுவலர் ஜி. வெற்றிவேல், மூலிகை ஆய்வாளர்கள் ஆர். ரவி, பவானந்தம், தேனி வளர்ப்பு ஆர்வலர் தேனீ. தமிழ்ச்செல்வன் ஆகியோர் பேசினர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை விவசாயிகள் எஸ். சுப்பிரமணியன், எ. முத்துவேல், எ. ராதாகிருஷ்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

கரூர் பொதுப் பணித் துறை உதவிச் செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியன் வரவேற்றார். கரூர் உபகோட்ட உதவிச் செயற்பொறியாளர் ஜெகன் நன்றி கூறினார்.

**உளுந்து சாகுபடியில் வறட்சி மேலாண்மை**

First Published : 01 Sep 2011 01:11:53 PM IST

ஆலங்குடி, ஆக. 31: ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் மையத்தில் வறட்சியான சூழலில் உளுந்து சாகுபடியை மேற்கொள்வது குறித்து விவசாயிகளுக்கு அண்மையில் விளக்கமளிக்கப்பட்டது.

பயிற்சியை முனைவர் ச. கவிதா தொடக்கிவைத்துப் பேசியது:

மானாவாரியாக உளுந்தை பயிரிடும் போது, வறட்சியைத் தாங்கி வளரும் தன்மையுள்ள ரகத்தை தேர்வு செய்ய வேண்டும்.

அதைத் தொடர்ந்து, விதை நேர்த்தி, விதை விதைப்பு, நீர் மேலாண்மை, களை மேலாண்மை, உர மேலாண்மை, பூச்சி நோய் நிர்வாகம் ஆகிய தொழில்நுட்பங்களை கையாண்டால் மகசூல் இரட்டிப்பாகும் என்றார் அவர்.

பயிற்சிக்கு நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் வ. கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். முனைவர் ரா. சுரேஷ் நன்றி கூறினார்.

**'அட்மா திட்டத்தின் கீழ் பண்ணைப் பள்ளி '**

First Published : 01 Sep 2011 01:08:23 PM IST

பெரம்பலூர், ஆக. 31: பெரம்பலூர் அரியலூர் மாவட்டத்தில் நெல் பயிர்களில் அட்மா திட்டத்தின் கீழ் பண்ணைப் பள்ளி நடைபெறுகிறது என்றார் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்ட அட்மா திட்ட இயக்குநரும், வேளாண் இணை இயக்குநருமான செ. சிவகுமாரின் பரிந்துரைப்படி, அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்தில் நெல் சாகுபடி பற்றிய அட்மா பண்ணைப் பள்ளி நமங்குணம் கிராமத்தில் நடைபெறுகிறது.

ஆறு வகுப்புகள் வீதம் மொத்தம் 25 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு, அட்மா திட்டத்தைப் பற்றியும் மற்றும் நாற்றங்கால் தேர்வு, நாற்றங்கால் பராமரிப்பு, விதை நேர்த்தி, மண் மாதிரி எடுத்தல், நிலத்தேர்வு, களை நிர்வாகம், பூச்சி நிர்வாகம், நோய் நிர்வாகம், உர மேலாண்மை, நுண்ணூட்ட மேலாண்மை மற்றும் அறுவடைக்குப் பிறகு நேர்த்தி செய்தல் உள்ளிட்ட சாகுபடி முறைகள் ஒவ்வொரு வகுப்பிலும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

ஒரு ஹெக்டேர் நிலத்தை தேர்ந்தெடுத்து, அதற்குத் தேவையான இடுபொருள்களை கொடுத்து, அதில் பண்ணைப் பள்ளி விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பித்து, வீண் செலவைக் குறைத்து வருமானத்தை பெருக்க இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

அதில், முதல் கட்டமாக விதை நேர்த்தி செய்தல் மற்றும் பூச்சிகளின் வயல் சூழல் ஆய்வு குறித்த செயல் விளக்கத்தை தொழில்நுட்ப வல்லுநர் சி. சங்கர், விதை நேர்த்தி செய்தலின் முறைகளையும் அவற்றின் நன்மைகளையும் விளக்கமாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியின் போது, செந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) டி. ராஜேந்திரன், துணை வேளாண் அலுவலர் எம். அப்பாவு மற்றும் வேளாண்மை உதவி அலுவலர் ஜெ. தேவி, முன்னோடி விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**திருந்திய நெல் சாகுபடிக்கு யோசனை**

First Published : 01 Sep 2011 01:06:08 PM IST

குளித்தலை, ஆக். 31: திருந்திய நெல் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற குளித்தலை பகுதி விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை வலியறுத்தியுள்ளது.

இதுகுறித்து குளித்தலை வட்ட வேளாண்மை உதவி இயக்குநர் கே. சேகர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாட்டில் காவிரி ஆற்றுப்பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் கூடுதல் நெல் மகசூல் கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகமிருப்பதாக ஆராய்ச்சிகள் மூலம் தெரியவந்துள்ளது.

நெல் சாகுபடியில் முக்கிய இடு பொருள்களான விதை, பாசன நீர் மற்றும் ரசாயன உரங்கள் பற்றாக்குறை, தொழிலாளர்கள் பற்றாக்குறை ஆகியவற்றால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையைத் தடுக்க, நவீன சாகுபடி முறையான திருந்திய நெல் சாகுபடி முறையைக் கையாண்டால், விவசாயத்தை ஒரு லாபகரமான தொழிலாக மாற்ற முடியும்.

இம்முறையில் சாகுபடி செய்து அதிக விளைச்சல் பெற்ற லாபம் அடைய, 11 தொழில்நுட்பங்கள் உள்ளன. அவற்றின் விவரம்:

வேளாண் துறைமூலம் வழங்கப்படும் சான்று பெற்ற உயர் விளைச்சல் மற்றும் வீரிய ஒட்டு நெல் ரகங்களைப் பயன்படுத்த வேண்டும்.

ஓர் ஏக்கர் நடவு செய்ய 2 கிலோ சான்று விதைகள் போதும். வயலின் தன்மைக்கேற்ப நாற்றங்கால் இடம், தரை மட்டத்திலிருந்து 5 செ.மீ உயர மேட்டுப் பாத்தியாக அமைக்க வேண்டும்.

ஏக்கருக்கு ஒரு சென்ட் (40 ச.மீ.) நாற்றங்கால் பரப்பில் 2 கிலோ முளைகட்டிய விதைகளை விதைக்க வேண்டும். நடவு செய்ய இளம் வயதுடைய 10 முதல் 14 வயதுடைய நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். இதற்கு முன் நிலத்தை சமன் செய்ய வேண்டும்.

சரியான நீர், உர மேலாண்மை மற்றும் களைக் கட்டுப்பாட்டுக்கும் நிலத்தை சமன் செய்தல் மிக அவசியம். சரியான அளவு இடைவெளியில் நட, அளவு குறியீட்டுக்குக் கருவியைப் பயன்படுத்த வேண்டும்.

25 செ.மீ.-க்கு 25 செ.மீ. இடைவெளியில் நடவு செய்வதன் மூலம் பயிர்களில் கோனோவீடர் கொண்டு களை எடுக்க முடியும். குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்து,நீர் பாய்ச்ச செய்ய வேண்டும். 2.5 செ.மீ-க்கு அதிகமாக நீர் நிறுத்தக்கூடாது.

கோனோவீடர் கருவி மூலம் 10 நாள்களுக்கு ஒரு முறை வீதம், 4 முறை களையெடுக்க வேண்டும். வேர்ப் பகுதியில் மண் கிளறப்படுவதால், நல்ல காற்றோட்டம் ஏற்படுவதோடு, வேர்களின் வளர்ச்சியும் அதிகரித்து, விரைவில் தூர் கட்டுவதற்குரிய சூழலும் பயிருக்குக் கிடைக்கிறது.

மண்ணில் களைகள் புதைக்கப்படுவதால், சத்துகள் அனைத்தும் அந்த மண்ணிலேயே சேர்க்கப்படுகிறது. அதனால், மண்ணிலுள்ள நுண்ணுயிர்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

இலை வண்ண அட்டையைப் பயன்படுத்தி தேவையான தழைச் சத்தை மேலுரமாக இட வேண்டும். விவசாயிகள் இதுபோன்ற தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு அதிக மகசூல் பெறலாம்.

மேலும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மூலம் திருந்திய நெல் சாகுபடி முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு மானியமாக ரூ. 3,000 வழங்கப்படுகிறது. விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்களை அணுகிப் பயன் பெறலாம்.

எனவே, குளித்தலை பகுதிகளில் உள்ள விவசாயிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**பண்ணைக் கருவிகள் பயன்பாடு குறித்த பயிற்சி**

First Published : 01 Sep 2011 01:15:30 PM IST

நீடாமங்கலம், ஆக. 31: நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் பண்ணைக் கருவிகள் பயன்பாடு மற்றும் பராமரிப்பு குறித்த பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

வேளாண் நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் தி. செங்குட்டுவன் பயிற்சியை தொடக்கிவைத்தார். பல்வேறு பண்ணைக் கருவிகளின் பயன்பாடு குறித்து முனைவர் அ. காமராஜ், முனைவர் மெ. செந்தில்குமார், முனைவர் கு. சுதாகர் ஆகியோர் விவசாயிகளுக்கு விளக்கினர்.

விவசாயிகள் வேட்டைத்திடல் பாலகுரு, தேவங்குடி ராஜ்குமார் ஆகியோர் தங்கள் விளைநிலங்களில் பயன்படுத்தப்படும் கருவிகளின் செயல்பாடுகள் குறித்து மற்ற விவசாயிகளுடன் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

பயிற்சியில் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 56 விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

ஏற்பாடுகளை திட்ட உதவியாளர் ரேகா செய்திருந்தார்.

**அதிக வேலைவாய்ப்பு அளிக்கும் மீன் வளர்ப்பு, ஆராய்ச்சி துறை**

First Published : 01 Sep 2011 01:14:14 PM IST

தஞ்சாவூர், ஆக. 31: மீன் வளர்ப்பு, வணிகம் மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் அதிக வேலைவாய்ப்பு உள்ளது என்றார் மத்திய அரசின் கடல்பொருள் ஏற்றுமதி வாணிபக் கழகத்தின் உதவி இயக்குநர் எஸ். கந்தன்.

தஞ்சாவூரை அடுத்த பூண்டி புஷ்பம் கல்லூரியில் விலங்கியல் மற்றும் உயிரி தொழில்நுட்பவியல் துறை சார்பில் உயிரியலில் தற்கால சாதனை என்ற தலைப்பில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது:

கடலில் ஆயிரக்கணக்கான மீன் இனங்கள் உள்ளன. அவற்றில் சில மீன் இனங்களின் செதில்கள் மனிதர்களின் விழித்திரை மாற்று அறுவை சிகிச்சைக்குப் பயன்படுகிறது. சில வகை மீன்களின் குடல் பகுதியிலிருந்து கிடைக்கும் மெல்லிய நரம்புகள் அறுவைச் சிகிச்சையின் போது தையல் போடுவதற்கு உதவுகிறது.

சில மீன்களின் உணவுப் பாதையில் கிடைக்கும் நொதிப் பொருள்கள் மனிதனின் செரிமான சக்தியை அதிகரிக்க பயன்படுத்தப்படுகிறது. மருத்துவம், உணவு, வணிகம் என பல்நோக்கில் மீன்களின் பயன்பாடு பரவியுள்ளது. எனவே, இந்தத் துறைகளில் வேலைவாய்ப்புகளும் அதிகரித்து வருகின்றன. இதை மாணவர்கள் பயன்படுத்தினால் முன்னேறலாம் என்றார் அவர்.

கருத்தரங்கிற்கு கல்லூரி முதல்வர் எஸ். சின்னையன் தலைமை வகித்தார். எம்.பில், மாணவர்கள் 8 பேர், எம்.எஸ்சி. விலங்கியல் உயிரி தொழில்நுட்பவியல் துறை மாணவர்கள் 34 பேர், தாவரவியல் துறை மாணவர் ஒருவர் ஆகியோர் தங்களது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

புஷ்பம் தொழில்நுட்பக் கல்லூரி இயக்குநர் எஸ். காமராஜ் மாணவர்களுக்கு சான்றிதழ்களை அளித்தார். விலங்கியல் துறைத் தலைவர் உ. பாலசுப்பிரமணியன் வரவேற்றார்.

பேராசிரியர் கு. ராஜேந்திரன் நன்றி கூறினார்.

**சாம்பார் வெள்ளரி விலை வீழ்ச்சி: விவசாயிகள் ஏமாற்றம்**

First Published : 01 Sep 2011 09:31:57 AM IST

ஆண்டிபட்டி, ஆக. 31:÷ஆண்டிபட்டி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் விளையும் சாம்பார் வெள்ளரிக் காய்க்கு போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

÷ஆண்டிபட்டி அருகே ஆசாரிபட்டி, ரோசனம்பட்டி, சித்தார்பட்டி, ஜி.உசிலம்பட்டி, கண்ணியப்பபிள்ளைபட்டி, கதிர்நரசிங்காபுரம், ராஜதானி, தெப்பம்பட்டி, பாலக்கோம்பை

உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் சாம்பார் வெள்ளரிப் பயிரிட்டுள்ளனர். இந்த வெள்ளரிக் காய்கள், தேனி மார்க்கெட் வழியாக கேரளத்துக்கு அதிகளவில் அனுப்பி வைக்கப்படுகின்றன.

÷தற்போது சாம்பார் வெள்ளரியின் விளைச்சல் அதிகமாக உள்ள நிலையில், அதன் விலை குறைந்துவருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

÷விவசாயி ராமச்சந்திரன் கூறியது:÷கடந்த ஆண்டு தேனி மார்க்கெட்டில் கிலோ ரூ.8-க்கு விற்பனையான சாம்பார் வெள்ளரி, தற்போது கிலோ ரூ.2-க்கு விற்பனையாகிறது. இதனால் காய்களைப் பறிப்பதற்கான கூலியைக் கொடுக்க முடியாக நிலையில் உள்ளோம். கேரளத்தில் ஓணம் பண்டிகையை முன்னிட்டு விரைவில் சாம்பார் வெள்ளரி விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

**சின்ன வெங்காயத்தில் பெரிய லாபம்**

First Published : 01 Sep 2011 12:49:13 AM IST



கடலூர்: சாம்பார் வெங்காயம் என்று அழைக்கப்படும் சின்ன வெங்காயம் பயிரிட்டால் விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்கும் என்று வேளாண் துறை தெரிவித்து உள்ளது.

இந்திய அளவில் தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் சின்ன வெங்காயம் அதிக பரப்பளவில் பயிரிடப்படுகிறது.

இயற்கை தந்த அனைத்து உணவு வகைகளிலும், மனிதனுக்கு அதிகம் பயன் கிடைக்கும் காய்கறிகளிலும் முதல் இடம் வகிப்பது வெங்காயம் என்று கூறலாம். காரணம் அதில் அந்த அளவுக்கு மருத்துவ குணங்கள் உள்ளன. அதன் வாசனைக்குக் காரணமான கந்தகத்தின் கூட்டுப் பொருள்கள் அடங்கிய வெங்காயம், புரதச்சத்து மிகுந்தது. தோலை சிவக்க வைக்கும் மேல் பூச்சு மருந்தாகவும் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

வெங்காயம் இதயத்துக்கு இதமானது. ரத்த விருத்தி, ரத்தம் உறைவதைத் தடுத்தல், ரத்த நாளங்களில் இரத்தம் தடையின்றி ஓடச் செய்தல், கொலஸ்டிராலை குறைத்தல், உயர் ரத்த அழுத்தத்தை குறைத்தல், ரத்தத்தில் சர்க்கரை அளவைக் கட்டுப் படுத்துதல், உணவை நன்றாக

செரிக்க வைத்தல், சிறுநீரகக் கற்களை கரையச் செய்தல் உள்ளிட்ட, பல்வேறு மருத்துவ குணங்கள் நிறைந்தது வெங்காயம். அது மட்டுமல்லாமல் சமையலிலும் வெங்காயத்தின் பங்கு முக்கியம் வாய்ந்தது. வெங்காயத்தின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இது தமிழ்நாட்டில் முக்கிய பயிர்களில் ஒன்றாகப் பயிரிடப்படுகிறது. 2009-10-ம் ஆண்டில் சுமார் 1 லட்சம் ஏக்கரில் வெங்காயம் பயிரிடப்பட்டு 3.40 லட்சம் டன் வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டது. இதில் 75 சதவீதம் சின்ன வெங்காயம் ஆகும். தமிழ்நாட்டில் வெங்காய உற்பத்தியில் பெரம்பலூர் மாவட்டம் முதல் இடம் (சுமார் 23 ஆயிரம் ஏக்கர்) வகிக்கிறது.

அடுத்து திருச்சி, திண்டுக்கல் மாவட்டங்களில் தலா 10 ஆயிரம் ஏக்கரிலும், அடுத்து கோவை, ஈரோடு, நாமக்கல், நெல்லை, விருதுநகர் மாவட்டங்களில் தலா 2,500 ஏக்கரிலும் வெங்காயம் பயிரிடப்படுகிறது. ஏப்ரல் முதல் மே வரை, அக்டோபர் முதல் நவம்பர் வரை என, இரு பருவங்களில் வெங்காயம் தமிழகத்தில் பயிரிடப்படுகிறது. தமிழ் நாட்டில் சின்ன வெங்காயத்தின் விலை கிலோ ரூ. 12 முதல் ரூ. 36 வரை இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் சின்ன வெங்காயத்தின் விலை, கர்நாடக மாநிலத்தில் இருந்து இறக்குமதி ஆகும் சின்ன வெங்காயத்தின் வரவைப் பொறுத்தே நிர்ணயம் செய்யப்படுகிறது. சின்ன வெங்காய ஏற்றுமதியில் இந்தியாவின் போட்டியாளர்களாக விளங்குவது வியத்நாம், தாய்லாந்து ஆகிய நாடுகளாகும். இந்தியாவை ஒப்பிடும்போது வியட்நாம் மற்றும் தாய்லாந்தில் உற்பத்திச் செலவு அதிகம் என்பதால், இந்தியாவுக்கு வெங்காய ஏற்றுமதிக்கான வாய்ப்பு அதிகம் உள்ளது.

தற்போது தமிழகத்தில் வெங்காய வரத்து குறைந்து கொண்டு இருப்பதால், சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை, தற்போது கிலோ ரூ. 24 முதல் ரூ. 27 வரை உள்ளது. கரீப் பருவத்தில் சின்ன வெங்காயம் பயிரிடலாம் என்று, தமிழக விவசாயிகளுக்கு வேளாண் துறை பரிந்துரைத்து உள்ளது.

கரீப் பருவத்து சின்ன வெங்காயத்தின் விலை அறுவடையின்போது (செப்டம்பர் முதல் அக்டோபர் வரை) கிலோவுக்கு ரூ. 15 முதல் ரூ. 20 வரை இருக்கக்கூடும் என்று வேளாண்துறை அறிவித்து உள்ளது. திண்டுக்கல் காய்கறிச் சந்தையில் கடந்த 13 ஆண்டுகளாக நிலவிய காய்கறிகள் விலை விவரத்தையும், சந்தை நிலவரத்தையும் ஆராய்ந்து, இந்த அறிவிப்பை அண்மையில் வேளாண் துறை வெளியிட்டு உள்ளது. நவம்பர், ஜனவரி (2012) மாதங்களில் வெங்காயத்தின் விலை ரூ. 5 முதல் 7 வரை உயரக் கூடும் என்றும் வேளாண்துறை கணித்துள்ளது

**கரும்புப் பயிரில் இரும்புச் சத்து பற்றாக்குறையைப் போக்க வழி**

First Published : 01 Sep 2011 12:48:11 AM IST



திண்டிவனம் : கரும்புப் பயிரில் இரும்பு சத்து பற்றாக்குறையை போக்குவதற்கான வழிமுறைகள் பற்றி திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் நா.ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அதன்படி கரும்புப் பயிரில் இரும்பு சத்து குறையும் போது கரும்பில் காணப்படும் அறிகுறிகள்:

இளம் பயிர்களில் புதிதாகத் தோன்றும் இலைகள் பற்றாக்குறை அறிகுறிகளைக் காட்டும் நரம்புப் பகுதிகள் கோடுபோல் இளம் பச்சை நிறத்திலும் நரம்புகளுக்கு இடைப்பட்ட பகுதிகள் நீண்ட பட்டைகளாக இலையின் அடி முதல் நுனி வரை பொன்நிற மஞ்சளாகத் தெரியும். பற்றாக்குறை அதிகமானால் இலைகள் வெளிர் மஞ்சள் நிறமாகிவிடும்.

பச்சையம் குறைந்து ஒளிச்சேர்க்கை பாதிக்கப்படுவதால் பயிர் வளர்ச்சிக் குன்றிவிடும்.

ஏற்படுவதற்கான காரணம்? கரும்பு அறுவடைக்குப் பிறகு விவசாயிகள் தோகையை எரித்து விடுவதால் மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள் மண்புழுக்களின் எண்ணிக்கை குறைவதோடு இரும்புச்சத்தில் கிடைக்கும் அளவும் குறைந்துவிடுகிறது. சுண்ணாம்பு அதிகம் உள்ள மண்ணில் மழைக்காலங்களில் இரும்புச்சத்தின் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் சுண்ணாம்பு தூண்டுதலால் ஏற்படக்கூடிய இரும்புச்சத்து பற்றாக்குறை என்பர்.

எப்பொழுது ஏற்படும்? மறுதாம்பு கரும்புப் பயிரில் இரும்புச்சத்துப் பற்றாக்குறை அதிகமாக பாதிக்கிறது.

இரும்புச்சத்து பற்றாக்குறை ஏற்படுவதற்கான காரணங்கள் மண்ணின் அங்கத்தன்மை, ஈரப்பதம் குறைவதும் மற்றும் சுண்ணாம்புசத்து அதிகரிப்பதால் இரும்புச்சத்து பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் மகசூல் குறைந்துவிடும்.

என்ன பாதிப்பு? தண்டு மற்றும் வேர் வளர்ச்சி பாதிக்கப்படும், இளம் இலைகள் வெளுத்துக் காணப்படும், பயிரின் குருத்து

காகிதம் போன்று வெளுத்துக் காணப்படும், முதிர்ந்த இலைகள் மட்டும் பச்சை நிறத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கும், இலைகள் ஆங்காங்கே கருகிக்காணப்படும், ஒளிச்சேர்க்கை அளவு குறைவதோடு மகசூல் இழப்பும் ஏற்படுகிறது.

எவ்வாறு நிவர்த்தி செய்வது? அடியுரமாக ஒரு ஹெக்டேருக்கு 100 கிலோ பெரஸ் சல்பேட்டை இலைகளில் நன்றாகப் படியும்படித் தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதனால் இரும்புச்சத்து பற்றாக்குறையை கட்டுDப்படுத்தலாம்.

இந்தத் தகவலை பேராசிரியர் மற்றும் தலைவர் நா.ராமமூர்த்தி, உதவிப்பேராசிரியர் சீனி.அன்புமணி, மற்றும் முதுநிலை ஆராய்ச்சியாளர் க.முத்துலட்சுமி கூட்டாகத் தெரிவித்தனர்.

**பண்ணைப் பள்ளிகளில் விவசாயிகளுக்கு பயிற்சி**

First Published : 01 Sep 2011 12:46:47 AM IST

காஞ்சிபுரம்: காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிராமப் புறங்களில் பண்ணைப் பள்ளிகள் அமைக்க வேளாண் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த பண்ணை பள்ளிகளில் பயிர்களை எப்படி பராமரிப்பது, அளவான பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்துவது, தேவையான உரங்களை பயன்படுத்துவது, நவீன தொழில் நுட்பங்கள் பயன்படுத்துவது ஆகிய குறித்து விவசாயிகளுக்கு முறையான பயிற்சியும், தொழில் நுட்ப ஆலோசனைகளும் இப் பள்ளிகளில் வழங்கப்படும்.

மேலும் இப் பள்ளிகளில் தோட்டப் பயிர்கள் பயிர் செய்தல், பயிர் செய்வதற்கு ஏற்ற மண் வகைகள், நீரினை அளவோடு பயன்படுத்துவது ஆகிய குறித்தும் பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன. கால் நடை வளப்பு மற்றும் பட்டு வளர்ப்பு குறித்தும் இப் பள்ளிகளில் உரிய பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன. இப் பள்ளிகளில் கால்நடைகளை தாக்கும் நோய்கள், அவற்றை குணப்படுத்தும் விதம், பட்டு வளர்ப்பில் உள்ள பிரச்சினைகள் ஆகியவை குறித்து விவசாயிகள் தெளிவாக தெரிந்து கொள்ளலாம்.

இப் பயிற்சி பள்ளிகள் கிராம அளவில் தொழில் நுட்பங்களை கடைபிடிக்கும் முன்னோடி விவசாயிகள் மூலம் நடத்தப்படும். அவர்களைக் கொண்டு செயல் முறை விளக்கங்கள் அளிக்கப்படும். இப் பள்ளியின் நடத்துனராக முன்னோடி விவசாயிகள் இருப்பர் என்று

வேளாண்மைத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இது குறித்து விரிவாக விளக்கம் வேண்டுவோர் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தையும், அல்லது அருகாமையில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களையோ அணுகலாம்.

**கத்தரிக்காய்: 160 நாள்கள் வரை ஹெக்டேருக்கு 70 டன் மகசூல்**

First Published : 31 Aug 2011 03:52:08 PM IST




சிவகங்கை, ஆக. 31: கத்தரியை பயிரிட்டு நன்கு பராமரித்தால் 150-160 நாள்கள் வரை ஹெக்டேருக்கு 70 டன் வரை மகசூல் பெறலாம் என்று சிவகங்கை தோட்டக்கலை துறையினர் தெரிவித்துள்ளனர்.

**கத்தரி ரகங்கள்**

ரவையா, அர்கா நவநீத், பூசா அன்மமால், கோ.பி.எச் 1, அஸ்பாரா, என்.எஸ்.1720, சாயா, நவ்கிரான் சப்பால், சியாமல், விஜய் ஆங்கூர் ஆகிய ரகங்கள் பயிரிட ஏற்றவையாகும்.

**பயிரிடும் முறை**

கத்தரி பயிரிட மே-ஜூன், அக்டோபர்-நவம்பர், ஜனவரி-பிப்ரவரி ஆகிய பருவங்கள் சிறந்தவை. ஒரு ஹெக்டேர் அளவில் பயிரிட 100 கிராம் போதுமானது. விதைகளை வரிசைக்கு வரிசை 75 செ.மீ., செடிக்கு செடி 60 செ.மீ என்ற இடைவெளியில் விதைக்க வேண்டும்.

பின்னர் அடியுரமாக ஹெக்டேருக்கு தொழு உரம் 25 டன், தழை, மணி, சாம்பல் சத்துகள் முறையே 100:150:100 கிலோ வீதம் இட வேண்டும். மேலுரமாக விதைத்த 30 நாள்கள் கழித்து 50 கிலோ தழைச்சத்து, பின் 60 நாள்கள் கழித்து 50 கிலோ தழைச்சத்து இட வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு**

காய் துளைப்பான் மற்றும் தண்டு துளைப்பான் பூச்சிகள் தாக்கினால் ஒரு லிட்டர் நீரில் எண்டோசல்பான் 2 மி.லி. மற்றும் 2 மி.லி. வேப்ப எண்ணெய் கலந்து தெளிக்க வேண்டும்.

பச்சை தத்துப்பூச்சி, சாம்பல் கூன்வண்டு, வெள்ளை ஈ தாக்குதல் தெரிந்தால் இமிடாகுளோபிரிட் மருந்தை ஒரு லிட்டர் நீரில் 0.5 மி.லி., மற்றும் 2 மி.லி. வேப்ப எண்ணெய் கலந்து தெளிக்கலாம்.

**நோய்கள்**

சிற்றிலை நோய் : புதிதாக வரும் இலைகள் சிறுத்து செடிகள் வளர்ச்சி குன்றி காணப்படும். இதை கட்டுப்படுத்த நோய் தாக்கப்பட்ட செடிகளை அகற்றி அழித்துவிட வேண்டும். ஒரு லிட்டர் நீரில் மீதைல்டெமட்டான் 2 மி.லி., அல்லது டைமெத்தோயேட் 2.5 மி.லி. கலந்து கை தெளிப்பான் மூலம் தெளித்து நோய் பரப்பும் காரணிகளைக் கட்டுப்படுத்தலாம்.

இலைப்புள்ளி நோய் : இலைகளின் மேல் வட்ட வடிவ சிறிய புள்ளிகள் காணப்படுவது இதன் அறிகுறிகளாகும். இதற்கு ஒரு லிட்டர் நீரில் மேங்கோசெப் 2 கிராம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம் என்று தெரிவித்தனர்.

**குறுவைப் பயிருக்கு உரமிடும் முறை: வேளாண் துறை விளக்கம்**

First Published : 31 Aug 2011 08:16:29 AM IST

திருவாரூர், ஆக. 30: குறுவை நெல் பயிருக்கு உரமிடுவது குறித்து வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகணன் விளக்கமளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருவாரூர் மாவட்டத்தில் ஏறத்தாழ 38,870 ஹெக்டேரில் குறுவை நெல் பயிரிடப்ப்டடு, தற்போது பயிர் தூர்கட்டும் பருவத்தில் மேலுரம் இடும் தருவாயில் உள்ளது. மேலும், இதுவரையில் 3,353 ஹெக்டேரில் நாற்றங்கால் அமைக்கப்பட்டு விவசாயிகள் சம்பா சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர்.

குறுவைப் பருவத்துக்கு மேலுரம் இடும் போது முதல் மேலுரம் நடவு செய்த 15-ம் நாள் 28 கிலோ யூரியா இட வேண்டும். 2-வது மேலுரம் பஞ்சு கட்டும் தருணத்தில் 28 கிலோ யூரியாவுடன் 17 கிலோ பொட்டாஷ் சேர்த்து இடலாம். மூன்றாவதாக நடவு செய்த 45-ம் நாள் 28 கிலோ யூரியா இட பரிந்துரை செய்யப்படுகிறது.

பொட்டாஷ் உரம் மேலுரமாக இட முடியாத சூழ்நிலையில் கீழ்காணும் முறையில் பொட்டாஷ் சத்தை பயிருக்கு அளிக்கலாம். மண்ணில் உள்ள பொட்டாஷ் உரத்தை கரைத்து பயிருக்கு அளிக்கும் பாக்டீரியாவை ஏக்கருக்கு ஒரு கிலோ என்ற அளவில் 25 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து இடலாம். இந்த பாக்டீரியாவை யூரியா போன்ற ரசாயன உரங்களுடன் கலந்து இடக் கூடாது. மல்டி கே என்ற உரத்தை ஏக்கருக்கு ஒரு கிலோ என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்,

மேற்காணும் முறைகளைப் பின்பற்றி பயிருக்கு சாம்பல் சத்தை அளிக்கலாம் என மயில்வாகணன் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**உணவுப் பொருள் பணவீக்கம் 10.05 சதவீதமாக அதிகரிப்பு**

செப்டம்பர் 02,2011,02:24




புதுடில்லி:நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், ஆகஸ்ட் 20ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், 10.05 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 9.80 சதவீதமாக இருந்தது. ஆக, உணவுப் பொருள் பணவீக்கம், 0.25 சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த ஐந்து மாதங்களுக்கு பிறகு, மீண்டும் இரட்டை இலக்கத்திற்கு உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், ஆண்டுக் கணக்கில், வெங்காயத்தின் விலை, 57.01 சதவீதம் உயர்ந்திருந்தது. அதேபோல், உருளைக்கிழங்கின் விலையும் 13.31 சதவீதம் அதிகரித்துள்ளது. இது தவிர, பழங்கள் விலை, 21.58 சதவீதமும், காய்கறிகள் விலை 15.78

சதவீதமும் உயர்ந்துள்ளது. மேலும், முட்டை, இறைச்சி, மீன் ஆகியவற்றின் விலையும் 12.62 சதவீதம் அதிகரித்துள்ளது.

பால் மற்றும் உணவு தானியங்களின் விலை முறையே, 9.22 சதவீதம் மற்றும் 4.64 சதவீதம் உயர்ந்துள்ளது.இருப்பினும், பருப்பு வகைகளின் விலை 4.16 சதவீதமும், கோதுமையின் விலை 2.52 சதவீதமும் குறைந்திருந்தது.மதிப்பீடு செய்யப்பட்ட வாரத்தில், முக்கிய உணவுப் பொருட்களின் விலை 12.93 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில் 12.40 சதவீதம் என்ற அளவில் குறைந்து இருந்தது.

மொத்த விலைக் குறியீட்டு எண்ணை கணக்கிடுவதில், முக்கிய பொருட்களின் பங்களிப்பு 20சதவீதத்திற்கும் மேல் உள்ளது.உணவுப் பொருட்கள் அல்லாத பிரிவில், நூலிழை, எண்ணெய் வித்துக்கள் மற்றும் தாதுப் பொருள்களின் விலை, 17.19 சதவீதம் குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 17.80 சதவீதம் என்ற அளவில் அதிகரித்து காணப்பட்டது.

கணக்கீட்டு வாரத்தில், எரிபொருள் மற்றும் மின்சாரம் ஆகியவற்றிற்கான பணவீக்கம், 12.55 சதவீதம் உயர்ந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 13.13 சதவீதம் என்ற அளவில் குறைந்திருந்தது.பணவீக்கத்தை கட்டுப் படுத்தும் நடவடிக்கையாக, ரிசர்வ் வங்கி, கடந்த 2010ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து, இதுவரையிலும், வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை 11 முறை உயர்த்தியுள்ளது.தற்போது நாட்டின் பணவீக்கம் இரட்டை இலக்க அளவிற்கு அதிகரித்துள்ளது என்பது,மத்திய அரசுக்கும், ரிசர்வ்வங்கிக்கும் மிகப் பெரும்சவாலாக அமைந்துள்ளது.

**உலக காபி ஏற்றுமதி 10.36% சரிவு**
செப்டம்பர் 02,2011,09:19



புதுடில்லி : ஜூலை மாதத்தில் உலக காபி ஏற்றுமதி 10.36 சதவீதம் சரிவடைந்துள்ளது. 60 கிலோ எடை கொண்ட பைகள் சுமார் 7.35 மில்லியன் அளவிற்கே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச காபி கழகம் தெரிவித்துள்ளது. இருப்பினும் 2010 ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2011 செப்டம்பர் வரையிலான 10 மாதங்களில் காபி ஏற்றுமதி 14 சதவீதம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதில்

ஜூலை மாதத்தில் இந்தியாவிலிருந்து 28,080 டன் காபி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

**கரும்பில் குருத்தழுகல் நோய் தாக்குதல் தடுக்க அறிவுரை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 02,2011,01:23 IST

நாமக்கல்: "கரும்பில் குருத்தழுகல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த, தடுப்பு முறைகளை கையாள வேண்டும்' என, நாமக்கல் உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கரும்புப் பயிரை, 20 வகையான நோய்கள் தாக்கி விளைச்சலுக்கும், சர்க்கரைச் சத்துக்கும் சேதம் விளைவிக்கின்றது. அதில், முக்கியமான நோய் குருத்தழுகல் நோய். இது, மூன்று முதல் ஏழு மாத கரும்பில், அதிக அளவில் தோன்றுகிறது. இந்நோயின் அறிகுறிகள் மஞ்சள் தேமல் நிலை, நுனி அழுகல் நிலை, கத்தி வெட்டு நிலை என மூன்று நிலைகளில் தோன்றுகிறது. இளம்பயிரில் குருத்து இலைகள் ஒன்றோடொன்று பிணைந்து, புதுக்குருத்து வெளிவராமல் தடுத்துவிடும். இந்நோயின் பூசண விதைகள் காற்றினால் பரவுகின்றன.

மே மாதம் நடப்படும் கரும்புகளில், இந்நோய் அதிக அளவில் தோன்றுகிறது. இந்நோய் தோன்றும் போது, மென்மோசெப் ஒரு லிட்டர் நீரில் மூன்று கிராம் அல்லது கார்பெண்டாசிம் ஒரு லிட்டர் நீரில் ஒரு கிராம் அல்லது காப்பர் ஆக்ஸி குளோரைடு ஒரு லிட்டர் நீரில் இரண்டு கிராம் என்ற அளவில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். நோயின் தீவிரத்தை கருத்தில் கொண்டு, மூன்று முறை தெளித்து கட்டுப்படுத்தலாம். நோய் முற்றிய நிலையில் தாக்கப்பட்ட பயிர்களைப் பிடுங்கி எறிய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மஞ்சளுக்கு விலையின்றி இருப்பு வைப்போர் அதிகரிப்பு தீபாவளியை எதிர்பார்த்து காத்திருப்பு**
பதிவு செய்த நாள் : செப்டம்பர் 02,2011,01:33 IST

ஈரோடு: தீபாவளி சமயத்தில் மஞ்சள் விலை உயர வாய்ப்புண்டு என்ற எதிர்பார்ப்பில், மஞ்சளை இருப்பு வைப்போர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடம், ஈரோடு சொசைட்டி, வெளிமார்க்கெட், கோபி சொசைட்டி ஆகிய மஞ்சள் சந்தைகளில், வாரத்தில் ஐந்து நாட்கள் ஏலம் நடக்கிறது. சென்றாண்டு மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம் 16 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது. விலை உயர்வு காரணமாக விவசாயிகள் மஞ்சள் மூட்டைகளை சந்தைகளுக்கு கொண்டு வந்து விற்பனைக்கு குவித்தனர். மஞ்சள் சாகுபடி இரு மடங்கு

அதிகரித்தது. நடப்பாண்டு ஜனவரி மாதம் மஞ்சள் சீஸன் துவங்கிய போது, தினசரி 10 ஆயிரம் மஞ்சள் மூட்டைகள் வரை வரத்தானது.

வரத்து அதிகரிப்பு காரணமாக சந்தைகளில் மஞ்சள் விலையும் தொடர்ந்து சரிய ஆரம்பித்தது. ஏழு மாதங்களாக மஞ்சள் விலை படிப்படியாக குறைந்து, தற்போது குவிண்டால் சராசரியாக 6,000 ரூபாயை எட்டியுள்ளது. வருவதை அடுத்து மஞ்சள் வரத்து கணிசமாக குறைந்துள்ளது. சாகுபடி செலவு, அறுவடை கூலி, போக்குவரத்து செலவு அதிகரித்துள்ள நிலையில், இப்போதைய விலை விவசாயிகளுக்கு கட்டுப்படியாகவில்லை. இதன் காரணமாக, ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு 1,000 முதல் 2,000 மூட்டைகள் மட்டுமே வரத்தாகிறது. வெளிமாநில வியாபாரிகள் வருகை குறைந்துள்ள நிலையில், உள்ளூர் ஏஜன்டுகள் குறைந்து விலைக்கு ஏலம் எடுத்து செல்கின்றனர். தினசரி ஒரு விலை மாற்றத்தை ஏற்படுத்துகின்றனர். இவர்களிடம், விவசாயிகள் யாரும் மஞ்சளை விற்பனை செய்ய முன்வருவதில்லை.

ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு நேற்று முன்தினமும், நேற்றும் விடுமுறை. ஆகஸ்ட் 30ம் தேதி 1,901 மூட்டைகள் வரத்தானது. வரத்து குறைந்து வரும் நிலையில், தீபாவளி பண்டிகை நெருங்குவதை அடுத்து, மஞ்சள் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது என, கருதும் விவசாயிகள், பண்டிகை வரை காத்திருந்து மஞ்சளை விற்பனை செய்யவிருப்பதாக கூறுகின்றனர். எனினும், குடோன்களிலும், விவசாயிகள் வீடுகளிலும் ஆயிரக்கணக்கான மூட்டைகள் தேங்கியுள்ளதாலும், வரும் டிசம்பர் மாதத்தில் அடுத்த மஞ்சள் சீஸன் துவங்கவிருப்பதாலும், விலை பெரியளவில் உயர வாய்ப்பில்லை என்றே வியாபாரிகள் கருதுகின்றனர்.

**நிரந்தர லாபம் தரும் தென்னங்கீற்று தொழில் ஆர்வத்துடன் பங்கேற்கும் பெண்கள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 02,2011,01:33 IST

ஈரோடு: பாரம்பரியமான தென்னங்கீற்று பின்னும் தொழிலில் ஈடுபடும் குடும்ப பெண்கள் நல்ல லாபம் பார்க்கின்றனர். திருமணம் மற்றும் இதர விசேஷ காலங்களில் வீட்டு முன் தென்னங்கீற்றால் பின்னப்பட்ட கீற்றுகளால் பந்தல் கூடாரம் அமைப்பது வழக்கம். என்னதான் ஷாமியான பந்தல் அமைத்தாலும், இயற்கையாக கிடைக்கும் தென்னங்கீற்றுக்கு தனி மகத்துவமே உள்ளது. தென்னை ஓலைகளை பல பின்னலாக பின்னும் தொழில், ஈரோடு, புங்கம்பாடியில் குடிசை தொழிலாக அதிகளவில் நடக்கிறது.

புங்கம்பாடியை சேர்ந்த தவமணி கூறியதாவது: தென்னங்கீற்று பின்னும் தொழிலை பத்தாண்டுகளுக்கு மேலாக செய்து வருகிறோம். நஞ்சனாபுரம், வேப்பம்பாளையம்,

ராசாம்பாளையம், குமாரவலசு ஆகிய பகுதியில் இருந்து தென்னை ஓலைகள் வாங்கி வருகிறோம். 30 முதல் 50 பைசா வரை தென்னை தோப்பு உரிமையாளர்கள் விலை கூறுவர். மொத்தமாக வாங்கி வந்து கீற்றாக பின்னுவோம். ஒரு கீற்று அதிகபட்சம் பத்து நிமிடத்தில் பின்னிவிடலாம். ஒரு நாளைக்கு நூறு கீற்றுகள் பின்னலாம். 100 கீற்று 300 ரூபாய் வரை விலைபோகிறது. ஆண்டுதோறும் ஆடி, சித்திரை மாதத்தில் கீற்று விற்பனை மந்தமாக இருக்கும்.

தற்போது மழைக்காலம் என்றாலும், உற்பத்தி நன்றாக உள்ளது. தேசிய ஊரக வேலை வாய்ப்பு 100 நாள் திட்டத்தில் சேர்ந்தால் கடினமாக உழைக்க வேண்டும். இதுபோன்று வேலைகள் அதிகம் சிரமப்பட வேண்டியிருக்காது. மகளிர் சுய உதவி குழுவினர் கூட அதிகளவில் இத்தொழிலை தேர்ந்தெடுத்து செய்கின்றனர். நல்ல வருமானம் உள்ள இந்த தொழிலை எல்லாத்தரப்பு பெண்களும் முன்வந்து செய்யலாம். சீஸன் காலத்தில் ஆர்டர் குவியும். கீற்று வியாபாரத்தில் நஷ்டம் ஆனவர்கள் எவரும் இல்லை. பாரம்பரியமான தொழிலான இத்தொழிலுக்கு எப்போதும் மதிப்பும், மரியாதையும் உண்டு. இவ்வாறு அவர் கூறினார்.

**பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளதால் பருத்தி உற்பத்தி 3.55 கோடி பொதிகளாக உயரும்**
செப்டம்பர் 01,2011,00:21



மும்பை: வரும் 2011-12ம் பருவத்தில் (அக்.-செப்.), நாட்டின் பருத்தி உற்பத்தி 3.55 கோடி பொதிகளாக (ஒரு பொதி= 170 கிலோ) அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.இது, நடப்பு பருத்தி பருவத்தில், 3.25 கோடி பொதிகள் என்ற அளவில் இருக்கும் என, பருத்தி ஆலோசனை கழகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக, நடப்பு பருவத்தை விட, வரும் பருவத்தில், பருத்தி உற்பத்தி 9 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.பருத்தி உற்பத்தியுடன், இறக்குமதி செய்யப்படும் 5 லட்சம் பருத்தி பொதிகளையும், கையிருப்பில் உள்ள 47.50 லட்சம் பொதிகளையும் சேர்த்தால் மொத்தம் 40.75 கோடி பருத்தி பொதிகள் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.அதேசமயம், வரும் பருவத்தில் பருத்திக்கான தேவை 3.51 கோடி பொதிகளாக இருக்கும் என்றும், இது, நடப்பு பருவத்தில், 3.23 கோடி பொதிகளாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வரும் பருத்தி பருவத்தில், நாட்டின் பல மாநிலங்களில், பருத்தி சாகுபடி செய்யும்பரப்பளவு அதிகரிக்கும் என்ற நிலைப்பாட்டால், உற்பத்தி உயர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதேசமயம், வரும் பருவத்தில், 70 லட்சம் பொதிகள் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படும் என, பருத்தி ஆலோசனை கழகம் தெரிவித்துள்ளது.இது குறித்து மத்திய ஜவுளி ஆணையர் ஏ.பீ.ஜோஷி கூறுகையில்,' வரும் பருவத்தில், 121 லட்சம் எக்டேரில், பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.இது, தற்போது, 111 லட்சம் எக்டேர் என்ற அளவில் உள்ளது. 2010-11ம் பருத்தி பருவத்தில், பஞ்சாப், அரியானா மற்றும் ராஜஸ்தான் ஆகியமாநிலங்களில், பருத்தி சாகுபடி பரப்பளவு, அதற்கு முந்தைபருவத்தை விட, 7 சதவீதம் குறைந்து, 13.57 லட்சம் எக்டேராக இருந்தது.அதேசமயம், இதே காலத்தில், குஜராத், மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் ஆகியமாநிலங்களில், பருத்தி சாகுபடி பரப்பளவு 7 சதவீதம் வளர்ச்சி கண்டு, 72.15 லட்சம் எக்டேராக உயர்ந்திருந்தது.ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய தென் மாநிலங்களில், இதன் சாகுபடி பரப்பளவு, 20.50 சதவீதம் உயர்ந்து, 24.51 லட்சம் எக்டேராக அதிகரித் திருந்தது.நடப்பு பருத்தி பருவத்தில், வடக்கு பகுதிகளில், பருத்தி உற்பத்தி 3 சதவீதம் குறைந்து, 39 லட்சம் பருத்தி பொதிகள் என்ற அளவில் இருந்தது. அதேசமயம், மத்திய பகுதிகளில், இதன் உற்பத்தி, 12.85 சதவீதம் உயர்ந்து, 202 லட்சம் பொதிகளாக இருந்தது. தென்மாநிலங்களில், இதன் உற்பத்தி, 5 சதவீதம் குறைந்து, 68 லட்சம் பொதிகள் என்ற அளவில் குறைந்திருந்தது.

ஒடிசா உள்ளிட்ட இதர மாநிலங்களில், பருத்தி உற்பத்தி, தலா 2 மடங்கு அதிகரித்து, 2 லட்சம் பொதிகளாக உயர்ந்திருந்தது.மத்திய அரசு, வரும் பருத்தி பருவத்தில், எந்த அளவிற்கு, ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கும் என்று முடிவு செய்யவில்லை.இருப்பினும், நடப்பு பருவத்தை போன்று, வரும் பருவத்திலும், 70 லட்சம் பருத்தி பொதிகளுக்கு அனுமதி வழங்கப்படலாம் என, இத்துறையைச் சேர்ந்தவர்கள் கருத்து தெரிவித்தனர்.நடப்பு 2010-11ம் பருவத்தின் தொடக்கத்தில், சர்வதேச சந்தையில் பருத்தியின் விலை, மிகவும் அதிகரித்திருந்தது. இதையடுத்து, உள்நாட்டிலும் இதன் விலை உயர்ந்தது.

பெரிய மற்றும் சிறியஆலைகள், பருத்தி பயன்பாட்டை முறையே, 215 லட்சம் பொதிகள் (219 லட்சம் பொதிகள்), மற்றும் 21 லட்சம் பொதிகள் (23 லட்சம் பொதிகள்) என்ற அளவில் குறைத்து கொண்டன.

சர்வதேச சந்தையிலும், நடப்பாண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில், இதன் விலைவரலாறு காணாத அளவிற்கு அதிகரித்திருந்தது.ஆனால், உலகின் பல்வேறு நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், இதற்கான பயன்பாடும், தேவையும் குறைந்தது. இதைத்தொடர்ந்து, உலகச் சந்தைகளிலும், இதன் விலை மிகவும் குறைந்துள்ளது.நடப்பாண்டு

ஏப்ரல் மாதத்தில், 356 கிலோ கொண்ட ஒரு கேண்டி பருத்தியின் விலை, 62 ஆயிரம் ரூபாய் என்ற அளவில் இருந்தது.உள்நாடு மற்றும் வெளிநாடுகளில், இதற்கான தேவை குறைந்ததையடுத்து, இதன் விலை தற்போது, 40 சதவீதம் சரிவடைந்து, ஒரு கேண்டி 39ஆயிரம் ரூபாய் என்ற அளவில் உள்ளது.

**உற்பத்தி குறைந்ததால் மிளகு விலை உயர்கிறது**

செப்டம்பர் 01,2011,00:20



கொச்சி : சர்வதேச சந்தையில், மிளகு அளிப்பு குறைந்துள்ளதால், அதன் விலை உயர்ந்து வருகிறது.பொதுவாக, ஜூன் - டிசம்பர் மாதங்களில் இந்தோனேஷியா மற்றும் பிரேசில் நாடுகளில் இருந்துஅதிகளவிலான மிளகு, சர்வதேச சந்தைக்கு வருவது வழக்கம். ஆனால், இவ்வாண்டு இந்தோனேஷியாவில் மிளகு உற்பத்தி குறைந்துள்ளது. பிரேசில் நாட்டின் மிளகு உற்பத்தி 35ஆயிரம் டன் என்ற அளவிற்கு இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், சர்வதேச சந்தையில் மிளகு அளிப்பு குறைந்து விலை உயர்ந்துள்ளதால், பிரேசில் நாட்டை சேர்ந்த வளமான விவசாயிகள், மிளகை விற்பனைக்கு அனுப்பாமல், இருப்பில் வைத்துள்ளனர்.வியட்நாம் நாட்டின் மிளகு கையிருப்பு 15 ஆயிரம் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 10ஆயிரம் டன் மிளகு, முன்னணி ஏற்று மதி நிறுவனங்களிடம் இருப்பதாக கூறப்படுகிறது. இதனால், சர்வதேச சந்தையில் வியட்னாம் மிளகின் அளிப்பு குறைந்து, விலை அதிகரித்து வருகிறது. சென்ற மாதம், வியட்நாம் நாட்டின் '500 ஜி1' வகையை சேர்ந்த ஒரு டன் மிளகு விலை 5,600 டாலர் என்ற அளவில் இருந்தது. இது தற்போது 7,050 டாலராக அதிகரித்துள்ளது.உள்நாட்டில், அஸ்தா வகை மிளகு, ஒரு டன் 7,500 -7,550 டாலர் என்ற அளவில் விற்பனையாகிறது. முன்பேர சந்தையில், ஒரு கிலோ மிளகு 305 -312 ரூபாய் என்ற அளவில்

விற்பனையாகிறது. இது, சென்ற ஜூலை மாதம் 280 ரூபாயாக இருந்தது. கடந்தாண்டு இது 198 ரூபாயாக குறைந்திருந்தது.மிளகு உற்பத்தி போதிய அளவிற்கு இல்லாததாலும், குளிர் காலத்தில் மிளகிற்கான தேவை அதிகரிக்கும் என்பதாலும், அதன் விலை மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**செப்டம்பர் மாத விற்பனைக்கு 19.31 லட்சம் டன் சர்க்கரை ஒதுக்கீடு**

செப்டம்பர் 01,2011,00:19



புதுடில்லி: மத்திய அரசு, இம்மாதத்தில், ரேஷன் மற்றும் வெளிச் சந்தையில், விற்பனை செய்ய, 19.31 லட்சம் டன் சர்க்கரையை ஒதுக்கீடு செய்துள்ளது. இதில், 17லட்சம் டன் சர்க்கரை வெளிச்சந்தை மூலமும், 2.31 லட்சம் டன் ரேஷன் கடைகள் வாயிலாகவும் விற்பனை செய்யப்படும் என, மத்திய உணவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.கடந்த ஆகஸ்ட் மாத விற்பனைக்காக மத்திய அரசு, மொத்தம், 19.20 லட்சம் டன் சர்க்கரையை ஒதுக்கீடு செய்திருந்தது. 2010-11ம் பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.42 கோடி டன்னாக இருந்தது.இது, இதற்கு முந்தைய சர்க்கரை பருவத்தில் (அக்.-செப்.), 1.88 கோடி டன்னாக இருந்தது. தற்போதைய நிலையில், உள்நாட்டில், சர்க்கரைக்கான தேவை, ஆண்டுக்கு 2.10-2.15 கோடி டன்னாக உள்ளது.

பருப்பு இறக்குமதி 26 லட்சம் டன்னாக சரிவு

செப்டம்பர் 01,2011,00:18



புதுடில்லி: சென்ற 2010-11ம் நிதியாண்டில், நாட்டின் பருப்பு வகைகள் இறக்குமதி, 26 சதவீதம் சரிவடைந்து, 26 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய 2009-10ம் நிதியாண்டில், 35 லட்சம் டன்னாக இருந்தது.சென்ற நிதியாண்டின் பயிர் பருவத்தில் (ஜூலை-ஜூன்), நாட்டின் பருப்பு வகைகள் உற்பத்தி, 1.81 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டிருந்தது. இது, இதற்கு முந்தைய நிதியாண்டில், 1.46 கோடி டன்னாக இருந்தது.சர்வதேச அளவில், பருப்பு வகைகளை உற்பத்தி செய்வதில், இந்தியா முன்னணி நாடாக உள்ளது.

இருப்பினும், உள்நாட்டுக்கான தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு உற்பத்தி இல்லை. இதன் காரணமாக, நம்நாடு பருப்பு வகைகளை இறக்குமதி செய்து கொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.தனியார் துறை நிறுவனங்களை தவிர, பொதுத்துறை நிறுவனங்களான எம்.எம்.டி.சி., பி.ஈ.சி., எஸ்.டி.சி.,மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் பருப்பு வகைகளை இறக்குமதி செய்துகொள்கின்றன.

கடந்த ஓராண்டு காலமாக, மும்பை, சென்னை மற்றும் கோல்கட்டா ஆகிய பெரு நகரங்களில், துவரை, உளுந்து, பாசிப் பயிறு உள்ளிட்ட பருப்பு வகைகளின் சில்லரை விற்பனை விலை, படிப்படியாக குறைந்து வருகிறது என,மத்திய உணவுத் துறை அமைச்சர் கே.வி.தாமஸ், ராஜ்ய சபாவில்தெரிவித்தார்.

**உலகளவில் தேயிலை உற்பத்தி 88.51 கோடி கிலோவாக குறைந்தது**

செப்டம்பர் 01,2011,00:15



குன்னூர்: நடப்பாண்டு, ஜூன் வரையிலான, 7 மாதங்களில், சர்வதேச அளவில் தேயிலை உற்பத்தி, 3.61 சதவீதம் குறைந்து, 88.51 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது. இது, சென்றாண்டு இதே காலத்தில், 92 கோடி கிலோவாக இருந்தது.உலகில், தேயிலை அதிகம் விளையும் நாடுகளில், நடப்பாண்டு உற்பத்தி குறைந்துள்ளது. குறிப்பாக, சர்வதேச தேயிலை சந்தையில் முக்கிய பங்களிப்பை கொண்டுள்ள கென்யாவில், தேயிலை உற்பத்தி, 20.50 கோடி கிலோவாக குறைந்துள்ளது.இந்தோனேஷியாவில் தேயிலை உற்பத்தி, 85 லட்சம் கிலோ குறைந்து, 3.80 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது. மலாவியில் தேயிலை உற்பத்தி, 27 லட்சம் கிலோ குறைந்து, 3.45 கோடி கிலோவாக வீழ்ச்சி கண்டுள்ளது.மதிப்பீட்டுக் காலத்தில், இலங்கையின் தேயிலை உற்பத்தியும், 11 லட்சம் கிலோசரிவடைந்து, 19.56 கோடி கிலோவாக குறைந்துள்ளது.இந்நாடுகளில் பருவ நிலை மாற்றம் உள்ளிட்டக் காரணங்களால், தேயிலை உற்பத்தி குறைந்துள்ளதாக கூறப்படுகிறது.அதே சமயம், இதர நாடுகளில் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது.

**வெல்லம் விலை திடீர் உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 01,2011,22:08 IST

திருப்பூர் : விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி மளிகை மார்க்கெட்டில் படையலுக்கு தேவையான வெல்லம் , கொண்டைகடலை, பொரி விலை உயர்ந்தது.விநாயகர் சதுர்த்தி தினமான நேற்று கோவில்கள் மற்றும் வீடுகளில் விநாயகருக்கு அலங்காரம், அபிஷேகம் செய்யப்பட்டது; கொளுக்கட்டை, அப்பம், மோதகம் படைக்கப்பட்டது. இதனால் படையலுக்கு தேவையான கொண்டை கடலை, வெல்லம், பொரிகடலை விலை திடீரென அதிகரித்தது.

மார்க்கெட் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறியதாவது: விஷேச தினங்கள் இல் லாததால், நுகர்வு குறைவால் கடந்த இரண்டு மாதங் களாக மளிகை பொருட்கள் விலை சீராக இருந்தது. விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத்தால், நேற்று முதல் படையல் பொருட்கள் நுகர்வு அதிகரித்தது.

கடந்த இருநாட்களுக்கு முன் வரை கிலோ 74 ரூபாயாக இருந்த கொண்டை கடலை 84 ரூபாயாக விலை உயர்ந்தது. பாயாசம், அடை, அப்பம் போன்ற இனிப்பு பதார்த்தங்களுக்கு தேவையான உருண்டை வெல்லம் கிலோவுக்கு நான்கு ரூபாய் அதிகரித்து 34 ரூபாய்; 42 ரூபாயாக இருந்த அச்சு வெல்லம் 46 ரூபாய்; ஒரு கிலோ பொரி 70 ரூபாய் என விலை அதிகரித்துள்ளது; ஆயுத பூஜை வரை விலை உயர்வு தொடரும், என்றார்.

**எண்ணெய் வித்து சாகுபடி பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 01,2011,01:47 IST

முசிறி: முசிறி வேளாண்மை கோட்டத்தில் உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில், எண்ணெய் வித்து சாகுபடி பயிற்சி முகாம் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது. இரண்டு நாட்கள் நடந்த முகாமிற்கு உதவி இயக்குனர் ராசாமணி வரவேற்றார். திருச்சி வேளாண்மை இணை இயக்குனர் சேகர் தலைமை வகித்து பயிற்சியை துவக்கி வைத்தார். உழவர் பயிற்சி நிலைய துணை வேளாண்மை இயக்குனர் பொன்னுசாமி எண்ணெய் வித்து பயிர்கள் பற்றி விளக்க உரையாற்றினார்.

பயிற்சியில் விவசாயிகளுக்கு எள், ஆமணக்கு, நிலக்கடலை முதலிய பயிர்களுக்கு விதை நேர்த்தி, உயிர் உரங்கள் பயன்பாடு, களை நிர்வாகம், பயிர் பாதுகாப்பு, ஆமணக்கில் கவாத்து செய்வது ஆகியவை படக்காட்சி மூலம் விளக்கி பயிற்சியளிக்கப்பட்டது. சிறுகமணி வேளாண்மை அறியவில் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சகுந்தலை எண்ணெய் வித்து பயிர்களுக்கு களை நிர்வாகம், உர நிர்வாகம் பற்றி விளக்கி பேசினார்.

உழவர் பயிற்சி நிலைய அலுவலர் கற்பகம் உதவி அலுவலர்கள் கல்பனா, ராதா, ராஜகோபால், கலைச்செல்வன், ரங்கநாதன், சுரேஷ்குமார் ஆகியோர் உட்பட பலர் பயிற்சி அளித்தனர். பயிற்சியில் முசிறி குணசீலம், கல்லூர், கோட்டாத்தூர், வேங்கைமண்டலம், திண்ணக்கோணம், கொடுந்துரை ஆகிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர். துணை வேளாண்மை அலுவலர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

**சூரியகாந்தியை அறுவடை செய்ய ஆள் பற்றாக்குறை : விவசாயிகள் அதிருப்தி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 01,2011,05:25 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் யூனியனுக்கு உட்பட்ட பகுதிகளில் சூரியகாந்தி விளைச்சல் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அறுவடை செய்ய விவசாய கூலியாட்கள் இல்லாமல் விவசாயிகள் காரணமாக திணறி வருகின்றனர்.

கிருஷ்ணராயபுரம் யூனியனுக்கு உட்பட்ட மணவாசி மற்றும் வீரராக்கியம், கட்டளை, பஞ்சப்பட்டி, மைலம்பட்டி, வயலூர் ஆகிய பகுதிகளில் பரவலாக எண்ணெய் வித்து பயிரான சூரியகாந்தி பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது சூரியகாந்தி நல்ல விளைச்சல் கண்டுள்ள நிலையில் அதனை பக்குவமாக அறுவடை செய்ய போதுமான விவசாய கூலி ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளனர். இதனால் விவசாயிகள் பெரிதும் சிரமம் அடைந்துள்ளனர். கிருஷ்ணராயபுரம் பகுதிகளில் தற்போது மழை விட்டு விட்டு பெய்கிறது. இதனால் ஈரப்பதமான சூழ்நிலையில் சூரியகாந்தி அறுவடை செய்ய முடியாத நிலை உள்ளது. எனவே வேலை வாய்ப்பு உறுதி திட்ட பணிகளில் உள்ளவர்களை விவசாய பணிகளுக்கு பயன்படுத்தி கொள்ள மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், சூரியகாந்தி எண்ணெய் வித்துக்கள் கூடுதலாக விலை உள்ளதால் விவசாயிகள் முடிந்தவரை அறுவடை பணிகளை துவங்கியுள்ளனர். மேலும், "சூரியகாந்தி விற்பனை செய்ய ஏதுவாக வேளாண்மை துறை சார்பில் சிறப்பு கொள்முதல் நிலையம் அமைக்க முன் வர வேண்டும்' என பகுதி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**வரத்து குறைந்ததால் பீன்ஸ் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 01,2011,21:01 IST

ஒட்டன்சத்திரம் : வரத்து குறைவு, திருமண முகூர்த்தம் காரணமாக ஒட்டன்சத்திரத்தில் பீன்ஸ் விலை கிலோவிற்கு 12 ரூபாய் அதிகரித்துள்ளது. ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் காய்கறிகள் விளைச்சல் குறைவு காரணமாக கடந்த சில நாட்களாக, மார்க்கெட்டிற்கு காய்கறி வரத்து நாளுக்கு நாள் குறைந்து வந்தது. இருந்த போதிலும் விலையில் ஏற்றமின்றி காணப்பட்டது. இந்நிலையில் திருமணம் உள்ளிட்ட பல சுப காரியங்கள் இந்த வாரத்தில் நடக்கஉள்ளன. இதன் காரணமாக காய்கறி தேவை அதிகரித்துள்ளது. வியாபாரிகள் பீன்ஸ், கொத்தவரையை போட்டி போட்டுக் கொண்டு வாங்கியதால் இவற்றின் விலை அதிகளவு உயர்ந்துள்ளது. பீன்ஸ் கிலோ 13 ரூபாய்க்கு விற்றது, கிலோவிற்கு 12 ரூபாய் விலை அதிகரித்து 25 ரூபாயாக உயர்ந்தது. இதேபோல் கிலோ ஏழு ரூபாய்க்கு விற்ற கொத்தவரை எட்டு ரூபாய் அதிகரித்து 15 ரூபாய்க்கு விற்றது. கிலோ 6.50 ரூபாய்க்கு விற்ற முருங்கையின் உயர்ந்து 8.50 ரூபாய்க்கு விற்றது. வெண்டை கிலோவிற்கு ஒரு ரூபாய் அதிகரித்து மூன்று ரூபாய்க்கு விற்றது.

**பராமரிப்பு இல்லாத வரதமாநதி அணை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 01,2011,21:01 IST

பழநி : சுற்றுலா பயணிகளை கவரும் வகையில், பழநி வரதமாநதி அணையை பராமரிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில், பழநி-

கொடைக்கானல் ரோட்டில் வரதமாநதி அணை உள்ளது. பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த அணையில், குளுமையான சூழலை வழங்கும் பசுமையான மரங்கள் பல உள்ளன. இவை தவிர குடும்பத்தினருடன் பொழுது போக்குவதற்கான பூங்காவும் உள்ளது. பண்டிகை காலம் மட்டுமின்றி வாரந்தோறும் சனி, ஞாயிறு கிழமைகளில், இங்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. இருப்பினும் அதற்கேற்ப அணையை பராமரிப்பதில் அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை. அணை அருகே மலைக்குன்றில் அமைக்கப்பட்டுள்ள ஓய்வு அறையும், பராமரிப்பின்றி பாழடைந்துள்ளது. செடிகள் அடர்த்தியாக வளர்ந்துள்ளதால், இங்குள்ள பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சிலை செடிகளுக்குள் மறைந்து காணப்படுகிறது. குழந்தைகளுக்கான விளையாட்டு அமைப்புகளும், பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இவற்றை சீரமைத்து, அணைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க மாவ ட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மஞ்சள் பயிருக்கு மேலுரம் வேளாண் துறை ஆலோசனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 01,2011,23:25 IST

தர்மபுரி: "பென்னாகரம் பகுதியில், சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சள் பயிருக்கு மேலுரம் இட வேண்டும்' என, வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.
தோட்டக்கலை உதவி இயக்குனர் முகுந்தன் வெளியிட்ட அறிக்கை: பென்னாகரம் தாலுகாவில் 3 ஆயிரம் ஏக்கரில் மஞ்சள் பயிர் பரவலாக சாகுபடி செய்யப்பட்டு, தற்போது, மூன்று மாத பயிராக உள்ளது. கடந்த ஒரு வாரமாக வானம் மேக மூட்டத்துடன் சில நாட்கள் மழை பெய்து வருகிறது. இதனால், சிபாரிசுபடி அடியுரம் மற்றும் மேலுரம் இடாத மஞ்சள் நிறத்துடன் காணப்படுகின்றன. இதற்கு மண்ணில் இலைகள், வெளிர் பச்சை, இளம் மஞ்சள் நிறத்துடன் காணப்படும். இதற்கு மண்டில் போதிய அளவு சத்துக்கள் இல்லாமல், பற்றாக்குறையாக உள்ளதே காரணமாகும். எனவே மஞ்சள் பயிருக்கு மேலுரம் இகுட வேண்டியது அவசியமாகும். மஞ்சள் பயிருக்கு நடவு செய்த ஒரு மாதத்தில் இருந்து ஐந்து மாதம் வரை ஒவ்வொறு மாத இடைவெளியிலும் மேலுரம் இட சிபாரிசு செய்யப்படுகிறது.

மூன்று மாத பயிராக உள்ள மஞ்சள் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 25 கிலோ யூரியா உரத்துடன் 15 கிலோ பெட்டாஷ் உரத்தினை நன்கு கலந்து பார்களின் ஒரங்களில் மண்ணில் போதிய ஈரம் உள்ள போது இட வேண்டும். இதே போல் மஞ்சள் நட்ட 120வது மற்றும் 150வது நாட்களில் மேற்குறிப்பிட்ட அளவு யூரியா மற்றும் பொட்டாஷ் உரங்களை மேலுரமாக இட்டு நீர் பாசனம் செய்ய வேண்டும்.

* இலை வழியாக நுண்ணூட்ட சத்து உர கரைசல் தெளித்தல்: மஞ்சள் பயிர்களின் வளர்ச்சிக்கு நுண்ணூட்ட சத்து உரங்களும் தேவைப்படுகின்றன. நுண்ணுட்ட சத்து உரங்களில் பற்றாக்குறையால் மஞ்சள் பயிர்களில் இலைகள், வெளிர் மஞ்சள் நிறாக மாறி காணப்படும். இக்குறையை போக்கிட 10 லிட்டர் நல்ல நீரில் ஆறு கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தினை நன்கு கலந்து ஒர் இரவு முழுவதும் ஊற விட்டு வைத்திருக்க வேண்டும். அடுத்த நாள் அக்கரைசலை வடிகட்டி எடுத்து கொள்ள வேண்டும். வடிகட்டிய கரைசலில் 150 கிராம இரும்பு சல்பேட் (அன்னபேதி உப்பு) 150 கிராம துத்தநாக சல்பேட், 150 கிராம போரக்ஸ், 150 கிராம் போரக்ஸ், 150 கிராம் மக்னிசியம் சல்பேட் மற்றும் 150 கிராம் யூரிய ஆகியவற்றை நன்கு கலந்து அக்கரைசலை 100 லிட்டர் பெருமளவுக்கு நல் நீரை சேர்த்து கலக்கி கரைசலை தயாரிக்க வேண்டும். இவ்வாறு தயாரித்த கரைசலை மாலை வேளையில் மண்ணில் போதிய ஈரம் உள்ள போது மஞ்சள் பயிர் இலைகள் மீது நன்குபடும்படி கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். சிபாரிசு செய்த அளவுக்கு மேல் நுண்ணூட்ட சத்து உரங்களை குறிப்பிட்ட அளவுகள் கரைசலில் சேர்க்க கூடாது. இதே போன்று மீண்டும் ஒரு முறை 20 நாள் இடைவெளியில் நுண்ணூட்ட சத்து உரங்களில் கரைசலை இலை வழி மூலம் தெளிக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு தங்கள் பகுதி தோட்டக்கலை துறை அலுவலர்களை அணகலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**பட்டுப்புழு வளர்ப்பு: விவசாயிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2011,22:32 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : பட்டு நூல் விலை இறக்குமதி வரி குறைப்பால், பட்டுக்கூடுவிற்கு விலை கிடைக்கால், விவசாயிகள் பாதிக்கின்றனர்.ஸ்ரீவில்லிபுத்தூர் ராமலிங்காபுரம், அணைத்தலைப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், மல்பரி செடிகள் பயிரிட்டு, பட்டுப்புழு வளர்ப்பு தொழிலில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர். கடந்த பிப்ரவரி வரை கிலோ பட்டுப்புழு கூட்டிற்கு ரூ. 410 கிடைத்தது. இந்நிலையில், பட்டு நூல் இறக்குமதி வரியை 35 லிருந்து 5 சதவீதமாக மத்தியரசு குறைத்தது. இதையடுத்து, பட்டு நூலின் விலை குறைந்தது. இதனால் விவசாயிகள் பாதிக்கின்றனர். விவசாயி முருகன் கூறியதாவது: பட்டுப்புழுகூடு வளர்ப்பில் லாபம் கிடைத்ததால், இதில் ஈடுபட்டேன். தற்போது விலை குறைவால், கிலோ பட்டுபுழுக்கூடுக்கு ரூ. 300 தான் கிடைக்கிறது, என்றார்.

**சூரியகாந்தி அறுவடை தொழில் நுட்பம் : வேளாண் அதிகாரி விளக்கம்.**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 01,2011,23:57 IST

தென்காசி : சூரியகாந்தி அறுவடை தொழில் நுட்பம் மற்றும் சாந்தை படுத்துதல் குறித்து நெல்லை மாவட்ட வேளாண் வணிகத்துறை துணை இயக்குநர் தியாகராஜன் விளக்கம் அளித்துள்ளார்.இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ""நெல்லை மாவட்டத்தில் செங்கோட்டை வட்டாரம் சாம்பவர்வடகரை, சுந்தரபாண்டியபுரம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் சூரியகாந்தி பயிர் செய்யப்பட்டு அறுவடை தருணத்தில் உள்ளது.

அறுவடையின் போது தொழில் நுட்பங்களை பின்பற்ற வேண்டும். சூரியகாந்தி பயிரின் இலைகள் பழுத்து மஞ்சள் நிறமாக மாறியும், பூக்கொண்டைகள் பழுப்பு நிறமாக மாறியும் இருந்தால் பயிர் அறுவடை செய்யலாம். விதைகளை சோதித்து பார்த்து மேல்புறம் கருமையானதாகவும், உள்புறம் வெள்ளை நிறமாகவும் கடினமாக இருந்தால் அறுவடைக்கு ஏற்ற தருணமாகும்.அறுவடை செய்தவுடன் காய வைத்து பூஞ்சானம் தாக்காமல் பார்த்துக் கொண்டால் மணிகள் தரம் உயர்ந்து சந்தையில் நல்ல விலை கிடைக்க ஏதுவாகும்.

பிரித்தெடுத்த மணிகளை காற்றில் தூற்றி விட்டு அயல் பொருட்களாகன கல், மண், தூசு, சருகுகள் இல்லாமல் சுத்தம் செய்ய வேண்டும். சந்தையில் 100 மில்லி சூரியகாந்தி விதைகளின் எடை 40 கிராம் எடையிருந்தால் முதல் தரமாக நிர்ணயிக்கப்படுகிறது. சுருங்கிய முதிராத பொக்கு விதைகளை பிரித்து தரம் உயர்த்தி லாபமடைய விவசாயிகளை கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அறுவடை செய்த தானியத்தை விற்பனை செய்யும் போது சந்தை நிலவரங்களை அறிந்து இடைத்தரகு இல்லாமல் விற்பனை செய்ய அருகில் உள்ள வேளாண்மை வணிகத்துறை வேளாண்மை அலுவலர் ராஜேந்திரகணேசன், உதவி வேளாண்மை அலுவலர்கள் கோமதிநாயகம், முத்துக்குமாரை தொடர்பு கொண்டு பலன் பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்'' என வேளாண் வணிகத்துறை துணை இயக்குநர் தியாகராஜன் அறிக்கையில் கூறியுள்ளார்.

**"பை' முறை விவசாயம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2011,00:00 IST



இயற்கையான உணவு எப்பொழுதுமே சிறந்தது. சரிவிகித, சத்தான, தீங்கு விளைவிக்காத உணவினை குழந்தைகளுக்கு தருவது ஒவ்வொரு பெற்றோரின் கடமை. இதை நான் இரு குழந்தைகளின் தாயாக சொல்கிறேன் என்கிறார் சித்ரா. ஐரோப்பிய நாட்டில் பயணம் செய்யும்போது பார்த்த சீதோஷ்ண நிலை, சமன்படுத்தப் பட்ட காய்கறி தோட்ட தொழிற் சாலைகளை மனதில் கொண்டு திட்டமிடப் பட்டதுதான் இந்த வீட்டுக் குறுந்தோட்டமும், வீட்டு மாடித் தோட்டமும். தேங்காய் மட்டையிலிருந்து கிடைக்கும் துகள்களை ஆதாரமாகக் கொண்டு அத்துடன் இயற்கைத் தாதுக் களையும், நுண்ணுயிர்களையும் கலந்து செடிகள் வளர்வதற்கான ஊடகத்தை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் பேராசிரியர்களின் உதவியோடு உருவாக்கி உள்ளார்.

இந்த ஊடகத்தை ஆராய்ந்தவர்கள் இது இயற்கையான சத்துமிகுந்த ஊடகம் மட்டுமில்லாமல் மிக சிறிதளவு தண்ணீர் இருந்தாலே செடிகள் வளர்வதற்கு போதுமானது என்கிறார்கள். கலக்கப்பட்ட ஊடகத்தை பைகளில் போட்டு விதைச்சான்று பெற்ற வீரிய விதைகளை விதைத்து வீட்டில் சூரிய வெளிச்சம் படும் வராந்தா, பால்கனி, மாடி, ஜன்னல் போன்ற இடங்களில் வளரவிடுவதுதான் வீட்டு குறுந்தோட்டம்.

அன்றாட தேவைக்கான கீரைகள், காய்கறிகள், அலங்கார செடிவகைகள், மூலிகை செடிகள் எது வேண்டுமானாலும் இந்தப் பைகளில் வளர்க்கலாம். பைகளில் விவசாயமா? கதை சொல்கிறார்களா? இல்லை இல்லை. நிஜம். 3 செடியிலிருந்து 8 கிலோ கத்தரிக்காய், 15 கிலோ தக்காளி அறுவடை செய்யப் படுகிறது. இச்செடிகளுக்கு வரும் நோய்களைக் கட்டுப்படுத்த பஞ்சகவ்யா இயற்கைவழி பூச்சிவிரட்டியும் உபயோகப்படுத்தப் படுகிறது.

**கீரைகள்**: கீரைகளில் புதினா, கொத்தமல்லி, வெந்தயக்கீரை, அரைக்கீரை, முருங்கைக்கீரை, கருவேப்பிலை, சிறுகீரை, பாலக்கீரை, பசலைக்கீரை, பொன்னாங் கண்ணிக் கீரை, வல்லாரைக்கீரை, தண்டுக்கீரை, புளிச்சகீரை ஆகியவை பயிர் செய்யப் படுகின்றன.

காய்கறிகளில் கத்தரி, தக்காளி, மிளகாய், வெண்டை, பாகற்காய், சுரைக்காய், முள்ளங்கி, பீட்ரூட், வெள்ளரி, அவரை ஆகியவை பயிர் செய்யப்படுகிறது.

**மூலிகைச்செடிகள்:** நமது அன்றாட வாழ்விற்குத் தேவையான மூலிகைகளையும் இம்முறையில் வளர்க்கலாம். மிக முக்கியமான மூலிகைகளான கற்பூரவல்லி, துளசி, பிரண்டை, சோற்றுக்கற்றாழை, சிறியாநங்கை, பெரியநங்கை, இன்சுலின், தத்துரா (கருஊமத்தை), பல்வலிப்பூண்டு, பார்வதிதழை, ஆடாதொடை, தைம் ரோஸ்மேரி, மின்ட் வகைகள், அறுபத்தாம் தழை, வெட்டிவேர், லேவண்டர், லெமன்கிராஸ், கரிசலாங்கண்ணி, தூதுவளை, அப்பகோவை, முடக்கத்தான், நொச்சி, பொடுதலை வளர்க்கலாம்.

இம்மூலிகைகளை வளர்க்கும் முறை பற்றியும், உபயோகிக்கும் முறை பற்றியும் இத்துறையில் பயிற்சி பெற்ற பேராசிரியர்கள் உதவியோடு எடுத்துரைக்கப் படுகிறது. மாடியிலோ அல்லது தரையிலோ 20+10 அளவில் வெயில் படும்படியான இடவசதி இருக்கின்றதா? இருந்தால் இந்த பசுமைக்குடில் அமைக்கலாம். ஐந்து நபர் கொண்ட குடும்பத்தின் காய்கனி, கீரைகள் தேவைகளை இந்த பசுமைக்குடில் பூர்த்தி செய்யும். தொடர்புக்கு: சித்ரா, 94433 74662, 97897 74662, 98428 56251, 91 422-434 9914.-கே.சத்தியபிரபா, உடுமலை

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2011,00:00 IST



**தென்னையில் ஊடுபயிராக நெல்:** கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, குருந்தன்கோடு ஊராட்சி, ராமநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த டி.தேவதாஸ் தென்னந்தோப்பில் நெற்பயிரைப் பயிரிட்டு சாதனை படைத்துள்ளார்.

குறுவையில் ஒரு ஏக்கர் நிலத்தில் 25 வருட வயதுள்ள தென்னை மரங்களை 25 அடி இடைவெளியில் நட்டு ஆண்டிற்கு இருமுறை ஊடுபயிராக சணப்பையும், தக்கைப்பூண்டையும் இயற்கை உரமாக பயன்படுத்துகிறார். கன்னிப்பூ பருவத்தில் செம்மை நெல் சாகுபடி முறையில் டி.கே.8004 என்ற நெல் விதையை நாற்றங்கால் அமைத்து

10 சென்ட் நிலப்பரப்பில் இயற்கை உரமிட்டு நடவு செய்து அறுவடை செய்து 140 கிலோ என்ற அளவில் நெல் விளைச்சல் பெற்றுள்ளார். தொடர்புக்கு: 98436 61262.

**புதுக்கோட்டை பலா** : ஒரு ஏக்கர் வரப்பில் 150 மரங்கள். அடர்நடவு முறையில் 300 மரங்கள் வரை. 5-6வது வருடம் முதல் தொடர் வருமானம். வருடந்தோறும் ரூ.1 லட்சத்திற்கு மேல் வருமானம். வயல் விளையவில்லை என்றால் வரப்பு பலா பலன் தரும். வறட்சி ஏற்பட்டாலும் பலா மட்டும் தொடர்ந்து பலன் தரும். பலாவோடு மிளகை ஜோடி சேர்த்தால் இரட்டிப்பு வருமானம். மேலும் விபரங்களுக்கு: லயன் எஸ்.டி.குமிழ் சண்முகசுந்தரம், ஸ்ரீஜெகதீஸ்வரர் உயர் ரக நாற்றுப்பண்ணை, ஆலங்குடி வழி, கொத்தமங்கலம் அஞ்சல், புதுக்கோட்டை. 94860 60136, 98942 91818. காட்டுப்புத்தூர் ராதாகிருஷ்ணன் - 99441 31671.

**கேழ்வரகு ரகங்களும் சிறப்பியல்புகளும்**

*கோ.9:*- வயது 100 நாட்கள். தானிய மகசூல் 4500 கிலோ/எக்டர். தட்டை விளைச்சல் 7000கிலோ/எக்டர். தானியம் வெள்ளை, மதிப்பூட்டம் பெறுவதற்கு ஏற்றது. மாவாகும் தன்மை அதிகம். அதிக புரதச்சத்து கொண்டது.

*கோ.13:*- வயது 105 நாட்கள். மகசூல் 3500 கிலோ/எக்டர். தட்டை விளைச்சல். 10,000 கிலோ/எக்டர். வறட்சியைத் தாங்க வல்லது. மானாவாரி மற்றும் இறவைக்கு ஏற்றது.

*கோ (ரா) 14:*- வயது 105-110 நாட்கள். மகசூல் 2774 கிலோ/எக்டர். தட்டை - 8428 கிலோ/எக்டர். அதிக புரதம், சுண்ணாம்பு சத்து உடையது. குலைநோய்க்கு சகிப்புத் தன்மை உடையது. மானாவாரி இறவைக்கு ஏற்றது.

*கே.7:*- வயது 95-100 நாட்கள். தானிய மகசூல் 3130 கிலோ/எக்டர். தட்டை - 5150 கிலோ/எக்டர். மானாவாரி, இறவைக்கு ஏற்றது.

*டி.ஆர்.ஒய்.1:*- வயது 102 நாட்கள். மகசூல் 4011 கிலோ/ எக்டர். தட்டை மகசூல் 6800 கிலோ/எக்டர். களர், உவர் நிலத்திற்கு ஏற்றது.

*பையூர்.1:*- வயது 115 நாட்கள். தானிய மகசூல் 3125 கிலோ/எக்டர். தட்டை - 5750 கிலோ. வறட்சியைத் தாங்க வல்லது. நீண்ட விரல் ரகம். மானாவாரி, இறவைக்கு ஏற்றது.

*பையூர் (ரா) 2:*- வயது 115 நாட்கள். மகசூல் 3150 கிலோ/எக்டர். தட்டை - 6000-7000 கிலோ/எக்டர். சாயாத தன்மை. குலைநோய்க்கு எதிர்ப்புத்தன்மை கொண்டது.-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**உலர் மலர் அலங்காரம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2011,00:00 IST

உலர் மலர்களையும், உலர் இலைகளையும் தயாரிக்க நல்ல சூரியவெளிச்சம் நிலவும் நாட்களில் செடியின் மீதுள்ள காலைப்பனி நீங்கிய பின்னர் சேகரிக்க வேண்டும். அறுவடை செய்த பின்னரும் மலர்களில் பனி நீர்த்துளிகள் காணப்பட்டால் அவற்றை உறிஞ்சும் காகிதம் கொண்டு ஒற்றி அகற்றிவிட வேண்டும். நீர் பாய்ச்சிய உடன் மலர்களைப் பறிக்காமல் நீர்பாய்ச்சி ஓரிரு நாட்கள் கழித்து, பின்னரே செடிகளிலிருந்து மலர்களைப் பறிக்க வேண்டும். நிறம் வெளிறாமல் புதிதாக மலர்ந்த மலர்களைத் தேவையான பருவத்தில் அறுவடை செய்ய வேண்டும். அறுவடை செய்தவுடன் காலந்தாழ்த்தாமல் உலர்த்த வேண்டும். இல்லாவிடில் இதழ்கள் வாடி தேவையான மலர் வடிவத்தினை இழந்துவிடும்.

உலர்த்தும் முன்னர் தேவையற்ற பாகங்களை வெட்டி அகற்றிவிட வேண்டும். அவற்றை காகிதங்களுக்கிடையில் வைத்து அதன் உருவ அமைப்பு போன்றே அழுத்தி வைக்க வேண்டும். உறிஞ்சும் காகிதங்களுக்கு இடையிலோ அல்லது உலர் கலன்களில் செயற்கையாக பராமரிக்கப்படும் வெப்பத்திலோ மலர்களை உலர்த்தலாம். மலர் வகைகளுக்கேற்றவாறு உலர்த்தும் வெப்பநிலையும் உலர்த்தும் காலமும் மாறுபடுகிறது. எனவே மலர் வகைகளைத் தனித்தனியே உலர்த்த வேண்டும்.

கெலிகிரைசம், லிம்மோனியம் போன்ற மலர்களைத் தலைகீழாக கட்டி விடுவதன் மூலம் காற்றில் உலர்த்தலாம். இவ்வாறு உலர்த்துவதால் இம்மலர்கள் தங்கள் புத்தம் புதுத் தன்மையில் இருந்து மாற்றங்களையும் அடைவதில்லை.

இலைகளையும் மலர்களையும் வெள்ளை மணல், சிலிக்கா ஜெல், போராக்ஸ் போன்றவை அடங்கிய உலோக, பிளாஸ்டிக் அல்லது மண் கலன்களில் வைத்துஅறை வெப்ப நிலையிலேயே உலர்த்தலாம். இம்முறையில் உலர்த்தும்போது மலர்கள் உலர நீண்டநாட்கள் எடுத்துக்கொள்ளும். உலர் ஊடகத்தில் வைக்கப்பட்ட மலர்களை தினமும் சூரிய ஒளியில் உலர வைப்பதன் மூலம் மலர்கள் விரைவில் உலர்ந்துவிடும். மின்சாரம் மூலம் வெப்பப்படுத்தப் படும் ஓவன்களிலும் மலர்களை மிக விரைவாக உலர்த்தலாம். இம்முறையில் உலர்த்த ஒவ்வொரு வகை மலர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட வெப்பநிலை தேவைப்படும். உதாரணமாக ரோஜா மலர்களை 40-45 டிகிரி செ. வெப்பநிலையில் 48 மணி நேரம் வைப்பதன் மூலம் உலர்த்தலாம். ஆனால் கிளாடியோலஸ் மலர்கள் இந்த வெப்பநிலையில் உலர 24 மணி நேரம் எடுத்துக்கொள்ளும்.

நுண்ணலைகளால் வெப்பப் படுத்தப்படும் ஓவன்களில் சிலிக்கா ஜெல்லில் பதப்படுத்தப் பட்ட மலர்களையும் இலைகளையும் மண்பாண்டங்களில் வைத்து உலர்த்தலாம். இதுவும் ஒரே சீராக மற்றும் விரைவாக உலர்த்தும் முறையாகும்.

மிகவும் மெலிந்த பூக்காம்புகளைக் கொண்டுள்ள மலர்களின் காம்புகளை அகற்றிவிட்டு 5 செ.மீ.

நீளமான மெல்லிய கம்பியில் மலர்களை இணைத்து உலர்த்தி பயன்படுத்தலாம். ஆழமற்ற தட்டுகளில் அடிப்பரப்பில் 5 செ.மீ. அளவில் உலர் ஊடகத்தில் ஒன்றை (போராக்ஸ், வெள்ளை மணல்) நிரப்பி அவற்றின் மேல் மலரை ஒழுங்காக வைக்க வேண்டும். சாமந்தி, டேலியா, ரோசா, மெரிகோல்டு போன்றவற்றை அவற்றின் மலர்க்காம்புகளுடனேயே உலர்த்தலாம். இவ்வாறு உரல் ஊடகத்தில் பாதுகாக்கப்பட்ட மலர்களை, ஓவனில் ஏற்ற வெப்பநிலையில் சரியான காலம் வரை உலர்த்த வேண்டும். நன்கு உலர்ந்த மலர்களை உலர் ஊடகத்தினின்று வெளியே எடுத்து மலர்களில் ஒட்டியுள்ள ஊடகத் துகள்களை அகற்றி அவற்றை சுத்தப்படுத்த வேண்டும். இவ்வாறு உலர்த்திய மலர்களையும் இலைகளையும் கண்ணாடி அல்லது பிளாஸ்டிக் ஜார்களில் சிலிக்கா ஜெல் படிகங்களுடன் சேமித்து வைக்கலாம்.
உலர் மலர்களையும் உலர் இலைகளையும் கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் கலன்களிலுள்ள ஈரப்பதம், காற்று மற்றும் தூசு போன்றவற்றால் பாதிக்காத வகையில் மூடி, அறைகளில் அலங்காரமாக வைக்கலாம். தொடர்புக்கு: ஆர்.ஜி.ரீஹானா, 268/77, பழைய ஹவுசிங் யூனிட், எல்லீஸ் நகர், தாராபுரம்-638 657.-ஆர்.ஜி.ரீஹானா, 89037 57427.

**வயல்களில் குவியலாக தேங்கியுள்ள நெல் : கொள்முதல் நிலையம் திறப்பு தாமதம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2011,01:01 IST

கோபிசெட்டிபாளையம்: நெல் கொள்முதல் நிலையம் திறப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் தடப்பள்ளி பாசனப் பகுதியில் அறுவடை செய்யப்பட்ட நெல் குவியல், குவியலாக வயல்களில் தேங்கி கிடக்கிறது. வியாபாரிகள் வராததால், வெளி மார்க்கெட்டிலும் விற்க முடியாமல், விவசாயிகள் அவதிப்படுகின்றனர். தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் 10 ஆயிரம் ஏக்கர் வரை நெல் பயிரிடப்பட்டு அறுவடை பணி தீவிரமாக நடக்கிறது. இயந்திரங்கள் மூலம் அறுவடை பணி மும்முரமாக நடப்பதால் ஒரே நாளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் அறுவடை செய்யப்படுகிறது. வயல்களிலேயே குவியல், குவியலாக நெல் குவித்து வைக்கப்பட்டுள்ளது.

"கோபி வட்டாரத்தில் பாரியூர் நஞ்சகவுண்டன்பாளையம், ஒத்தக்குதிரை, கள்ளிப்பட்டி, காசிப்பாளையம், கூகலூர், டி.என்.பாளையம், கணபதிபாளையம் உள்ளிட்ட ஒன்பது இடங்களில் நெல் கொள்முதல் திறக்கப்படும்' என, வேளாண் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார். ஆனால், இதுவரை நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லை. நெல் அறுவடை காலங்களில், கோபி சுற்று வட்டாரப்பகுதிக்கு, கேரளா மற்றும் ஆந்திரா மாநில வியாபாரிகள் நேரடியாக வந்து, நெல் கொள்முதல் செய்து செல்வர். நடப்பாண்டு இதுவரை வெளிமார்க்கெட் வியாபாரிகள் எவரும் வரவில்லை. வெளிமார்க்கெட்டில் நெல்லை விற்க முடியாத நிலையில்,

விவசாயிகள் உள்ளனர். ரம்ஜான், விநாயகர் சதுர்த்தி ஆகிய பண்டிகை விடுமுறை கழிந்த பின், சனி, ஞாயிறு விடுமுறை நாளாகும். இடையில் வெள்ளிக்கிழமை மட்டுமே உள்ளதால், அன்று நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட வாய்ப்பு இல்லை. திங்கட்கிழமைக்கு மேல் நெல் கொள்முதல் திறக்கப்படும். தற்போது, கோபி பகுதியில் அவ்வவ்போது மழை பெய்வதால், திறந்த வெளியில், வயலில் குவித்து வைக்கப்பட்டுள்ள நெல் மணிகள் வீணாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

நெல் விவசாயிகள் கூறியதாவது: சென்றாண்டு நெல் கொள்முதல் நிலையம் இயங்கிய கட்டிடங்களில் போதிய ஏற்பாடு செய்யாததால், நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. நெல் கொள்முதல் நிலையங்களிலும் நாள்தோறும் மூன்று லட்சம் ரூபாய் வரைதான் நெல் கொள்முதல் செய்ய பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒரேநாளில் அதிகளவில் நெல்லை கொண்டு செல்லும் போது, மறுநாள்தான் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிகளில் நெல் அறுவடை தீவிரம் அடைந்து வரும் நிலையில், நெல் கொள்முதல் நிலையத்தை உடன் திறந்து, உடனுக்குடன் பணம் வழங்க வேண்டும்.

அரசு நெல்கொள்முதல் நிலையங்களில் ஒரு பொதி 2,500 முதல் 2,600 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. ஆனால், வியாபாரிகள் ஒரு பொதி 2,000 முதல் 2,100 ரூபாய் வரையே வழங்குகின்றனர். இதனாலேயே, நெல் கொள்முதல் நிலைங்களில் நெல் விற்பனை செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். காலதாமதமின்றி நெல் கொள்முதல் நிலையம் திறக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**பட்டுப்புழு வளர்ப்பு தொழிலில் விவசாயிகள் அரசு மானியங்களை பயன்படுத்த அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2011,01:27 IST

பொள்ளாச்சி : மாநில அரசின் மானிய உதவிகள் மற்றும் பட்டுக்கூடுகளுக்கு நல்ல விலை கிடைப்பதால் பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதிகளில் மல்பெரி சாகுபடி பரப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.பொள்ளாச்சி அடுத்த வேட்டைகாரன்புதூர், ஒடையகுளம், மண்ணூர், ஜலத்தூர், டி.கோட்டாம்பட்டி, ஜமீன் காளியாபுரம், நா.மூ.சுங்கம், ஆழியாறு போன்ற பல பகுதிகளில் விவசாயிகள் அதிகளவில் பட்டுப்புழு வளர்ப்பு தொழிலுக்காக "மல்பெரி' செடிகளை (பட்டு புழுக்களின் உணவு) பயிரிட்டுள்ளனர்.வெண்பட்டுக்கூடுகளுக்கான தேவை இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் அதிகரித்துள்ளது. இதனால், பட்டுக்கூடுகளுக்கு நல்ல விலை

கிடைத்து வருகிறது. தொழிலாளர் தேவை குறைவு, மானியத்திட்டங்கள் உட்பட பல்வேறு காரணங்களால் விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பு தொழிலில் ஈடுபட ஆர்வம் காட்டி வருகின்றனர். மல்பெரி சாகுபடி பரப்பு கடந்தாண்டை விட பல ஏக்கர்கள் உயர்ந்துள்ளன.பொள்ளாச்சி பகுதிகளில் மல்பெரி சாகுபடி பரப்பு கடந்த 2008- 09 ம் ஆண்டில் 559 ஏக்கராக இருந்தது. கடந்த 2009-10 ம் ஆண்டு 682 ஏக்கர்களாக அதிகரித்து; இந்தாண்டு மேலும் 220 ஏக்கர்கள் கூடுதலாகியுள்ளது. தற்போது பொள்ளாச்சி பகுதியில் 828 ஏக்கரில் மல்பெரி பயிரிடப்பட்டுள்ளது.மத்திய பட்டு வாரியம் மற்றும் மாநில பட்டு வளர்ச்சி துறை சார்பில் தொழில் வளர்ச்சிக்காக விவசாயிகளுக்கு பல மானியங்களை வழங்கப்படுகிறது. நடவு மானியமாக ஒரு ஏக்கருக்கு 4 ஆயிரத்து 125 ரூபாய் வழங்கப்படுகிறது.சொட்டு நீர் பாசனத்துக்காக ஒரு ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. "ஷெட்' கட்ட 1,000 சதுரடிக்கு 50 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இத்துடன் 30 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கருவிகள் வழங்கப்படுகின்றன.

பட்டு வளர்ச்சி துறை அதிகாரிகள் கூறியதாவது:பட்டு புழு வளர்ப்பில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு பல்வேறு மானியங்கள் வழங்கப்படுகின்றன. பட்டு வளர்ச்சி துறை மற்றும் மத்திய பட்டு வாரியம் சார்பில் விவசாயிகளுக்கு பல்வேறு முகாம்கள் மூலம் தொழில் நுட்ப ஆலோசனைகள் தரப்படுகின்றன.மல்பெரி செடி சாகுபடி செய்யும் முன்பும், செய்த பின்பும் மண் பரிசோதனை செய்ய வேண்டும். பின்னர் தேவையான அளவு பசுந்தாழ் உரம் பயன்படுத்த வேண்டும். இதனால், தரமான மல்பெரி இலைகளை உற்பத்தி செய்ய முடியும்.பட்டு புழு வளர்ப்பில் போதுமான இடைவெளியில் மல்பெரி செடிகள் நடவு செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு 300 செடிகள் வீதம் நட வேண்டும். இதனால், ஐந்தாண்டுகளுக்கு பிறகும் நல்ல அறுவடை எடுக்கலாம்.பட்டுப்புழுக்கள் வளர்ப்பில் ஈடுபட்டிருக்கும் அனைத்து விவசாயிகளும் செயற்கை உரத்தை பயன்படுத்துவதை தவிர்த்து அதற்கு மாற்றாக மக்கும் குப்பைகளை பயன்படுத்தினால்,பயிர்கள் நன்கு வளர்வதுடன் செலவும் குறையும்.ஒரு ஆண்டில் 12 பேட்ச் புழு வளர்ப்பு செய்தால் , விவசாயிகள் போதுமான லாபம் பெறலாம். பட்டுப்புழு வளர்ப்புத்தொழில் நிரந்தர வருமானம் தரக்கூடியது. சர்வதேச அளவில் நாளுக்கு நாள் பட்டு நூல் மற்றும் பட்டு கூடுகளின் விலை விரைவில் அதிகரிக்க வாய்புள்ளது.ஒராண்டுக்கு குறைந்தது ஒன்றரை லட்சம் ரூபாய் முதல் இரண்டு லட்சம் ரூபாய் வரை லாபம் ஈட்டலாம். எனவே பட்டுப்புழு வளர்ப்பு தொழிலை விவசாயிகள் தேர்ந்தெடுத்து உள்நாட்டிலுள்ள பட்டு நூல் பற்றாக்குறையை தீர்ப்பதுடன் விவசாயிகளும் வாழ்வாதரத்தை மேம்படுத்தி கொள்ளலாம், என்றனர்.

**வேளாண் பல்கலையில் பேக்கரி தொழில்நுட்ப பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2011,01:25 IST

கோவை : தமிழ்நாடு வேளாண் பல்கலையில் பேக்கரி தொழில் நுட்பம் குறித்த இரண்டுநாள் பயிற்சி முகாம் நடக்கிறது.இது குறித்து வேளாண் பல்கலை வெளியிட்ட அறிக்கை: செப். 5, 6 தேதிகளில் நடக்கும் இப்பயிற்சியில், ரொட்டி வகைகள், கேக்,பிஸ்கட் உள்ளிட்டவற்றை எளிய முறையில் தயாரிப்பது குறித்து தொழில் நுட்ப பயிற்சி வழங்கப்படுகிறது.பயிற்சியில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் 1000 ரூபாய் செலுத்தி பெயரை பதிவு öŒ#து கொள்ளலாம். பல்கலைக்கு நேரில் வரமுடியாதவர்கள், பயிற்சி கட்டணத்தை வரைவோலை மூலமும் அனுப்பி பெயரை பதிவு செய்யலாம். முதன்மையர், வேளாண் பொறியியல் கல்லூரி என்ற பெயரில் பாரத ஸ்டேட் வங்கியில் டி.டி.எடுத்து, பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு செப்.5 ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.விபரங்களுக்கு தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மை பல்கலைக்கழகம், 0422-6611340, 6611268 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மக்காச்சோள ஆராய்ச்சிக்கு முன்னுரிமை துணைவேந்தர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2011,01:19 IST

கோவை : வேளாண் பல்கலை சார்பில், பொள்ளாச்சி அருகே வடக்கி பாளையம் கிராமத்திலுள்ள புதிய சிஎம்எச்-08-028 எனும் மக்காச் சோள வீரிய ரகத்தின் செயல் விளக்க திடலை, துணைவேந்தர் முருகேசபூபதி தலைமையிலான குழுவினர் பார்வையிட்டனர்.தமிழ்நாடு வேளாண் பல்கலை சார்பில் வடக்கிபாளையம் கிராமத்தில் புதிய வீரிய ரக மக்காச்சோள வளர்ப்பின் மகசூல் திறனை வெளிப்படுத்த, ஒரு ஏக்கர் அளவில் செயல்விளக்க திடல்கள் 15 அமைக்கப்பட்டன. இத்திடல்கள் விவசாயி காமதேனு என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் நிறுவப்பட்டன.அதிக மகசூல் தரும் சி.எம்.எச்., 08-282 வீரிய ஒட்டை, கோ.எச்.எம்.,5 வீரிய மக்காச்சோளத்துடன் ஒப்பிடும் வண்ணம் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.அதிக மகசூல்; வயது 110 நாட்கள்; கோ.எச்.எம்.,5 வீரிய ஒட்டை விட 29 சதவீதம் அதிக மகசூல் மற்றும் தனியார் வீரிய ஒட்டுக்களை விட எட்டு முதல் பத்து சதவீதம் அதிக மகசூல்; அதிக உடைப்பு திறன் (81சதவீதம்) மற்றும் அதிக விடை (400 கிராம், 1000 விதைகள்), பெரிய மஞ்சள் நிற விதைகள், அதிக மாவுச்சத்து, அதிக புரதம், அதிக பீடா கரோடீன், நடுத்தர அளவு கொழுப்புச்சத்து, மேடிஸ், டர்சிகம் இலை கருகல், அடிச்சாம்பல் நோய், பூத்தபின் வரும் தண்டு அழுகல் மற்றும் பாக்டீரியா

இலைக் கருகல் ஆகிய நோய்களுக்கு எதிரான திறன் உள்ளிட்ட சிறப்புகளை விவசாயிகளிடம் எடுத்துரைத்தனர்.இது குறித்து துணைவேந்தர் முருகேச பூபதி கூறியதாவது:செயல்விளக்க திடல்களின் முடிவுகளை பொறுத்து, இப்புதிய வீரிய ஒட்டு மக்காச்சோளம், தமிழக விவசாயிகள் பயன்பெறும் வகையில் அடுத்தாண்டு வெளியிடப்படும். தற்போது தமிழ்நாட்டில் கோழி தீவன தொழிற்சாலைகள் விரிவடைந்து வருவதால், மக்காச்சோள தேவை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இதனை சரிகட்ட வேளாண் பல்கலை மக்காச்சோள ஆராய்ச் சிக்கு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. பல புதிய அதிக மகசூல் தரும் வீரிய ஒட்டுகளை உருவாக்கி வருகிறது. இவ்வாறு, அவர் கூறினார்.

### பெட்டாஷ் உரத்தட்டுப்பாடு: விவசாயிகள் குமுறல் : செப்டம்பரில் 25,000 டன் வருகை; வேளாண் துறை ஆறுதல்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2011,23:56 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பெட்டாஷ் தட்டுப்பாடு இருப்பதாகவும், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி தாலுகாவில் தனியார் உர விற்பனை கடைகளில் கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் விவசாயிகள் குற்றம்சாட்டி வருகின்றனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் ஆடிப்பட்டத்தில் பல பகுதிகளில் மஞ்சள், கரும்பு, நெல், குச்சிகிழங்கு உள்ளிட்ட பல்வேறு உணவு மற்றும் தானிய, எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது பெய்த மழையை தொடர்ந்து சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் முதல் கட்ட களை சீரமைப்பு பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டிருப்பதோடு, உர நிர்வாகத்தில் விவசாயிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

மாவட்டத்தில் விவசாய சாகுபடிக்கு ஏற்ப உரங்கள் கிடைக்கவில்லை என்ற குற்றசாட்டு இருப்பதோடு, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய தாலுகா பகுதிகளில் தனியார் உரக்கடைகளில் கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் புகார் தெரிவித்து வருகின்றனர். இந்த புகாரை தொடர்ந்து 14க்கும் மேற்பட்ட உரக்கடைகளின் தற்காலிகமாக உரம் விற்பனையை நிறுத்தி வைத்துள்ளனர். உர விலை கூடுதலாக விற்பனை செய்வது குறித்து புகார் இருந்த போது, கடைகள் மீது விற்பனை உரிமத்தை ரத்து செய்தால், தற்போதைய சூழ்நிலையில் உரங்களுக்கு கூடுதல் தட்டுப்பாடு ஏற்படும் அபாய் இருப்பதால், மாவட்ட நிர்வாகம் இது குறித்து அதிரடியான நடவடிக்கையில் இறங்க தயக்கம் காட்டி வருகின்றனர்.

இருப்பினும் கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பனை தொடர்பாக வரும் புகார்கள் குறித்து உரிய ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கவும் வேளாண் உர கட்டுப்பாடு ஆய்வு குழு மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மாவட்டத்தில் பெட்டாஷ் உரத்தட்டுப்பாடு இருப்பதாக சமீபத்தில் நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.
"பெட்டாஷ் உள்ளிட்ட உரத்தட்டுப்பாட்டை போக்க வரும் செப்டம்பரில் 25,000 டன் உரங்கள் தர்மபுரி மாவட்டத்துக்கு வர இருப்பதாகவும்' வேளாண் துறை மூலம் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. அதே போல் தனியார் உர கிடங்குகளில் கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பனை செய்வதை தடுக்க மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் மூலம் உரங்களை முழுமையாக விற்பனை செய்ய அரசை கேட்டு கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.
மேலும் வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு கடந்த ஜூலை மாதத்துக்கு பின் 358 மெட்ரிக் டன் டி.ஏ.பி., உரமும், 39 தொடக்க வேளாண் கூட்டுறவு 640 மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் உரமும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு கடன் சங்களை அணுகி விவசாயிகள் தேவையான உரங்களை பெற்று கொள்ளவும், நடப்பு மாதத்தில் 74 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்களுக்கு 925 மெட்ரிக்கு டன் டி.ஏ.பி., உரங்கள் வழங்க மான்பெட் தலைமை அலுவலகம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வேளாண் துறை மூலம் விவசாயிகளுக்கு குறைதீர் கூட்டத்தில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மாவட்ட நிர்வாகம் தட்டுப்பாடு இல்லாமல் உரங்கள் வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

**இந்திய பால் உற்பத்திக்கு ஆதரவு அளிக்கும் சர்வதேச தொழில்நுட்பம்**

ஆகஸ்ட் 31,2011,13:38



புதுடில்லி : தேவை அதிகரித்து வருவதால் இந்தியாவின் பால் உற்பத்தி 20 மில்லியன் டன்னாக சரிவடைந்துள்ளது. இதனால் இந்தியாவின் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக தொழிற்நுட்ப உதவி அளிக்க சர்வதேச முன்னணி பால் நிறுவனங்கள் முன் வந்துள்ளன. சர்வதேச பால் உற்பத்தியாளர்கள் கூட்டம் டில்லியில் நடைபெற்றது. இதில் அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து, பிரான்ஸ், அயர்லாந்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டு, இந்தியாவிற்கு தொழில்நுட்ப உதவி வழங்க முன்வந்துள்ளனர். 2010ல் இந்தியாவின் பால் உற்பத்தி 140 மில்லியன் டன்னாக இருந்தாலும், உள்நாட்டு தேவை 160 மில்லியன் டன்னாக உள்ளது. இத்தகவலை கால்நடை வளர்ப்பு, பால் மற்றும் மீன் வளத்துறை இணைச் செயலாளர் சஞ்சய் பூஸ்ரெட்டி தெரிவித்துள்ளார். மேலும் 2020ல் இந்தியாவின் பால் தேவை 180 மில்லியன் டன்னாக அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஆண்டுக்கு சராசரியாக பால் வளத்துறை வளர்ச்சி 6 சதவீதம் தேவைப்படுவதாகவும், தற்போது 4 சதவீதம் மட்டுமே இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தினசரி பால் கொள்முதல் 24 லட்சம் லிட்டராக உயர்வு

ஆகஸ்ட் 31,2011,10:39



சென்னை : 'அரசின் தொடர் நடவடிக்கைகளால், தினசரி பால் கொள்முதல், 24 லட்சம் லிட்டரை எட்டியுள்ளது. அதை, 27 லட்சம் லிட்டராக உயர்த்த வேண்டும்'' என அமைச்சர் சிவபதி கூறினார். பால் கொள்முதலை அதிகரிப்பது குறித்து, அமைச்சர் சிவபதி தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடந்தது. செயலர் சுகன்தீப் சிங் பேடி, நிர்வாக இயக்குனர் மோகன், ஆவின் பொது மேலாளர் குமாரவேல் பாண்டியன் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர். ஆலோசனை வழங்கி, அமைச்சர் சிவபதி பேசும்போது,''அரசின் தொடர் நடவடிக்கைகளால், நாளொன்றுக்கு 20 லட்சம் லிட்டராக இருந்த பால் கொள்முதல், தற்போது, 24 லட்சம் லிட்டரை எட்டியுள்ளது. அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு, பால் கொள்முதலை நாளொன்றுக்கு, 27 லட்சம் லிட்டராக உயர்த்த வேண்டும்'' என்றார்.

**உற்பத்தி உயர்வால் ஏலக்காய் விலை குறைய வாய்ப்பு**

ஆகஸ்ட் 31,2011,00:29



கொச்சி: ஏலக்காய் உற்பத்தி அதிகரித்துள்ளதால், அதன் விலை மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது ஒரு கிலோ ஏலக்காய் 550 -600 ரூபாய் வரை விலை போகிறது.சென்ற 2010-11ம் நிதியாண்டில், நாட்டின் ஏலக்காய் உற்பத்தி 10ஆயிரத்து 350 டன்னாக இருக்கும் என்று நறுமணப் பொருள்கள் வாரியம் மதிப்பிட்டுள்ளது.ஏலக்காய் உற்பத்தி, முந்தைய 2009-10ம் நிதியாண்டிலும், இதே அளவில் தான் காணப்பட்டது.இந்நிலையில், ஏலக்காய் உற்பத்தி உயர்ந்துள்ளதாலும், சந்தையில், வழக்கத்தை விட முன்னதாகவே ஏலக்காய் வரத்து அதிகரித்துள்ளதாலும், அதன் விலை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் ஏலக்காய் அதிகம் விளைகிறது. ஜூன், மாதத்தில் பருவ மழை தொடங்கிய பிறகு,ஏலக்காய் பூ பூத்து, 3 மாத காலத்திற்குப் பிறகு காய் காய்ப்பது வழக்கம். ஆகஸ்ட் மாதத்தில் ஏலக்காய் வரத்து அதிகரிக்கத் தொடங்கி, ஏல மையங்களில் விற்பனை நடைபெறும். ஆனால், இவ்வாண்டு பருவமழை முன்னதாகவே தொடங்கி விட்டதால், ஜூன் - ஜூலை மாதங்களில் ஏலக்காய் அறுவடை நடைபெற்று சந்தையில் வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.இதனால், கடந்த இரண்டாண்டுகளாக உச்சத்தில் இருந்து வந்த ஏலக்காய் விலை சரியத் தொடங்கியுள்ளது.சர்வதேச அளவில் ஏலக்காய் உற்பத்தி குறைந்ததால், அதன் விலை அதிகரித்து காணப்பட்டது. உலகில், ஏலக்காய் உற்பத்தியில் கவுதமாலா நாடு முதலிடத்தில் உள்ளது. இந்நாட்டில் இருந்து அதிகளவில் ஏலக்காய் இறக்குமதியாகி வந்தது. ஆனால், கடந்த இரண்டாண்டுகளாக, கவுதமாலாவில் ஏலக்காய் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் சர்வதேச சந்தையில் ஏலக்காய்க்கு தேவை அதிகரித்து, விலை உயர்ந்தது.கடந்த 2010ம் ஆண்டு, ஜூன் மாதம் ஒரு கிலோ ஏலக்காய் 1,950 முதல் 2,000 ரூபாய் வரை விலை போனது. இந்நிலையில், உள்நாட்டில், ஏலக்காய் உற்பத்தி அதிகரித்துள்ளதையடுத்து, அதன் விலை தற்போது கிலோ 550 - 600 ரூபாய் என்ற அளவில் குறைந்துள்ளது.ஏலக்காய் விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில், அதிகளவில் இருப்பு

வைத்திருந்த விவசாயிகள், தற்போது உற்பத்தி அதிகரித்து, ஏலக்காய் வரத்து உயர்ந்துள்ளதால், கையிருப்பில் உள்ள ஏலக்காயை விற்பதில் தீவிரமாக உள்ளனர்.

இதனால், வரும் மாதங்களில் ஏலக்காய் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளதாக இத்துறையை சார்ந்தவர்கள் தெரிவித்தனர்.

**முதல் காலாண்டில் பண்ணைத் தொழில் வளர்ச்சி 3.9% அதிகரிப்பு**

ஆகஸ்ட் 31,2011,12:27



புதுடில்லி : ஜூன் மாதத்துடன் முடிவடைந்த முதல் காலாண்டில் நாட்டின் விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த பண்ணைத் தொழில்களின் வளர்ச்சி 3.9 சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டின் முதல் காலாண்டில் பண்ணைத் தொழில் வளர்ச்சி 2.4 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. 2010-11ம் ஆண்டின் மழை காலத்தில் நாட்டின் அரிசி உற்பத்தி வளர்ச்சி 11.3 சதவீதமும், கோதுமை உற்பத்தி வளர்ச்சி 6.3 சதவீதமும், தானிய உற்பத்தி வளர்ச்சி 0.7 சதவீதமும், பருப்பு உற்பத்தி வளர்ச்சி 4.9 சதவீதமும் அதிகரித்துள்ளது. இதே போன்று எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி வளர்ச்சியும் 12 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2010-11ம் ஆண்டில் இந்தியா, 241.56 மில்லியன் டன் உணவுதானியத்தை உற்பத்தி செய்துள்ளது.

## கடந்த 6 மாதங்களில் இல்லாத அளவிற்கு உணவு பொருள் பணவீக்கம் 10.05 சதவீதமாக உயர்ந்தது



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*காய்கறிகள், பழங்கள் விலை உயர்வால், ஆகஸ்டு 20–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பொருள் பணவீக்கம் கடந்த ஆறு மாதங்களில் இல்லாத அளவிற்கு 10.05 சதவீதமாக உயர்ந்துள்ளது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இந்த பணவீக்கம் முந்தைய வாரத்தில் 9.80 சதவீதமாக இருந்தது. கடந்த மார்ச் 12–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் இது 10.05 சதவீதமாக இருந்தது. அதன் பிறகு தற்போதுதான் இரட்டை இலக்க அளவிற்கு உயர்ந்துள்ளது.*

*ரிசர்வ் வங்கி*

*பாரத ரிசர்வ் வங்கி, பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை 11 முறை உயர்த்தி உள்ளது. இந்நிலையிலும், உணவு பணவீக்கம் கட்டுக்குள் வரவில்லை. ஆக, உணவு பணவீக்கம், பணப்புழக்கம் காரணமாக அதிகரிக்கவில்லை என்பதை இது எடுத்துக்காட்டுகிறது என பொருளியல் நிபுணர் ஒருவர் தெரிவித்தார். தேவைப்பாட்டை ஈடுகட்டும் வகையில் உணவு தானியங்கள் போதிய அளவிற்கு கிடைக்காததால்தான் உணவு பணவீக்கம் அதிகரித்து வருகிறது.*

*ரிசர்வ் வங்கி பல முறை வட்டி விகிதங்களை உயர்த்தியதையடுத்து, நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் கடந்த ஆறு காலாண்டுகளில்*

இல்லாத அளவிற்கு குறைந்துள்ளது.

நடப்பு ஆண்டு அக்டோபர் மாதம் வரை அனைத்து பொருள்களுக்கான பொது பணவீக்கம் அதிகமாக (9 சதவீதம்) இருக்கும் என பாரத ரிசர்வ் வங்கியும், பிரதம மந்திரியின் பொருளாதார ஆலோசனைக் குழுவும் அண்மையில் தெரிவித்து இருந்தன.

வெங்காயம்

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில் வெங்காயம், உருளைக்கிழங்கு விலை முறையே 57.01 சதவீதம் மற்றும் 13.31 சதவீதம் உயர்ந்துள்ளது. காய்கறிகள் மற்றும் பழங்கள் விலை முறையே 15.78 சதவீதம் மற்றும் 21.58 சதவீதம் உயர்ந்துள்ளது.

முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 12.62 சதவீதமும், பால் மற்றும் தானியங்கள் விலை முறையே 9.22 சதவீதம், 4.64 சதவீதம் அதிரித்துள்ளது.

அதேசமயம், பருப்பு வகைகள் மற்றும் கோதுமை விலை முறையே 4.16 சதவீதம் மற்றும் 2.52 சதவீதம் குறைந்துள்ளது.

உணவு பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் பணவீக்கம் 12.40 சதவீதத்திலிருந்து 12.93 சதவீதமாக உயர்ந்துள்ளது. பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் இதன் பங்களிப்பு 20 சதவீதமாக உள்ளது. எனவே, ஆகஸ்டு மாதத்தில் பொது பணவீக்கம் அதிகரிக்கும் என்ற அச்சப்பாடு நிலவி வருகிறது.

தினகரன்

**உணவு பணவீக்கம் 10.05% கடன் வட்டி 0.25% உயரும்**

பதிவு செய்த நாள் : 9/2/2011 0:15:10



புதுடெல்லி: வெங்காயம், பழங்கள் ஆகியவற்றின் விலை உயர்வால் ஆகஸ்டு 20ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் பணவீக்கம் 10.05 சதவீதமாக அதிகரித்தது. கடந்த 5 மாதங்களுக்குப் பின் (மார்ச் 12) இரட்டை இலக்கத்தை தொட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டின் ஆகஸ்டு 20ம் தேதியுடன் முடிந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், வெங்காயம் விலை 57 சதவீதம், உருளை 13.31 சதவீதம், பழங்கள் 21.58 சதவீதம், ஒட்டு மொத்த காய்கறிகள் 15.78 சதவீதம், மீன், முட்டை, இறைச்சி 12.62 சதவீதம், பால் 9.22 சதவீதமும் அதிகரித்தது. இதனால் உணவு பணவீக்கம் 10.05 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இது முந்தைய வாரத்தில் 9.80 சதவீதமாகவும், கடந்த ஆண்டின் இதே காலத்தில் 15 சதவீதமாகவும் இருந்தது. பணவீக்கம் இரட்டை இலக்கத்தை எட்டி இருப்பது கவலை அளிப்பதாக மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். இந்நிலையில், இதைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி விரைவில் கடன் வட்டியை 0.25 சதவீதம் உயர்த்தும் என இத்துறை சார்ந்த நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.